உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பிரமோத்தர காண்டம்

இது
யாழ்ப்பாணத்து வட்டுநகர்
குருமூர்த்தி ஐயரவர்களால்
வசனரூபமாகச் செய்யப்பட்டது

சரஸ்வதி புஸ்தகசாலை
175, செட்டியார் தெரு
கொழும்பு

சுன்னுகம்
திருமகள் அழுத்தகம்
1948

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஸ்ரீபஞ்சாக்ஷரமான்மியச் சருக்கம்	1
2.	பிரதோஷ விரதச் சருக்கம்	4
3.	சோமவார விரதச் சருக்கம்	10
4.	சிவயோகியர் மகிமைச் சருக்கம்	17
5.	விபூதிச் சருக்கம்	23
6.	சிவபூசைச் சருக்கம்	27
7.	உமாமகேசுர விரதச் சருக்கம்	28
8.	உருத்திராக்ஷ மாணமியச் சருக்கம் ...	31
9.	ஸ்ரீருத்திர மான்மியச் சருக்கம்	34
10.	புராணசிரவணச் சருக்கம்	36

முகவுரை

இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு வேதங்களாலும் சிறப்பித்துச் சொல்லப்படும் ஸ்ரீ பஞ்சாக்ஷரம், சிவராத்திரி முதலிய சிவவிரதங்கள், சிவயோகியர், விபூதி, சிவபூசை, உருத்திராக்ஷம், ஸ்ரீருத்திரம், புராணசிரவணம் என்னுமிவைகளின் மான்மியங்களை அந்நான்கு வேதங்களுக்கும் ஒழிபாகச் சரித்திரவாயிலான் உணர்த்தலின், இந்நூல் பிரமோத்தர காண்டம் எனப்பட்டது. பிரமமெனினும் வேதமெனினு மொக்கும். உத்தரம் ஒழிபாகச் சொல்லப்படும் விஷயங்கள். இராமாயணத்தில் உத்தரகாண்ட மெனப்படுவதும் ஈண்டு ஆராய்தற்பாலது.

இந்நூல், வடமொழியினின்றும் தமிழிலே வரதுங்கராமபாண்டியரால் மொழிபெயர்த்துப் பாடப்பட்ட பத்தியரூபமாகிய பிரமோத்தர காண்டத்தின் வழிநூலாகச் செய்யப்பட்டது. இவ் வரதுங்கராமபாண்டியர், புவிராஜர் குலத்திலே திருநெல்வேலித் தென்காசியைச் சார்ந்த சங்கரநயினார் கோயில் என்னுமிடத்தின் அண்மையிலுள்ள கரிவலம் வந்த நல்லூரிலே அவதரித்து, அரசுவீற்றிருந்து, வடமொழியிலே, வேதங்களையும் சைவாகமங்களையும், வேதாங்கங்களையும் உபாங்கங்களையும், ஸ்நைஷதம் முதலிய காவியங்களையும், நாடகங்களையும்; தமிழிலே தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, வடமொழியினின்றும் புராணங்களையும், காவியங்களையும், வடமொழி வர்ணனைநயமும், அலங்கார நயமும் தமிழிலே சிறக்குமாறு, சீவகசிந்தாமணி முதலிய பழையநூல்களின் பொருள்களும், சொற்களும், சொற்றொடர்களும் நயங்களும் அமையப் பல நூல்களையும் அருளிச்செய்த கவிராஜராவர். இவ் வரசர், வேம்பத்தூரிலே எழுந்தருளியிருந்த ஈசான சிவாசாரியரிடத்திலே சமய தீக்ஷை, விசேஷ தீக்ஷை, நிருவாண தீக்ஷை, ஆசாரியாபிஷேகம்

என்னும் நான்கும் பெற்றுச் சிவபெருமானுடைய திருவடிகளிலே பதிந்த நெஞ்சுடைய சைவாதிராஜராயும் விளங்கியவர். இவர், குலசேகரவரகுணபாண்டியர் என்றும் வழங்கப்படுவர். இவ்வரசரது வேததலை வித்துவானுகக் காசிக் கலியன்கவிராயர் என்பவர் விளங்கினரென்றும், அவ்வவையிலே புரூரவ சரிதை என்னும் நூலை ஐயம்பெருமாள் சிலந்தகவிராஜர் என்பவர் செய்து அரங்கேற்றினரென்றும் பெரியோர் சொல்லுவர்.

இவ்வரசரைப் போலவே இவரது தேவியாரும் கனிஷ்ட பிதாவின் புதல்வராகிய அதிவீரராமபாண்டியரும் கல்வியில் வல்லுநர்களாயும், சைவசமயப்பற்றுடையவர்களாயும், பிரபந்தஞ் செய்பவர்களாயுமிருந்து தமிழ்நாட்டைப் புரந்தளித்தார்கள். இவர்களது காலம் 16-ம் நூற்றுண்டாகும். இவ் வரதுங்கராம பாண்டியராலே வாயுசங்கிதை முதலிய வேறு பல நூல்களும் அருளிச்செய்யப்பட்டன. அவற்றுள்ளே, பிரமோத்தர காண்டம் என்னும் நூல் முற்கூறியபடி சைவசமயிகளுக்கு வேண்டப்படும் பொருள்களைக் கொண்டிருத்தலின், அதன் வழித்தாக இப் பிரமோத்தர காண்ட வசனத்தைச் செய்து அச்சிற் பதிப்பித்தேன். நான் இயற்றும் இத்தகைய வசன நூல்களைச் சைவசமயிகளும், புலவர்களும் மிகையென்றேனும், குறையென்றேனும் நிந்தியாது ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இத்தகைய நூல்களைச் செய்யுமாறு என்னை ஏவி, இவற்றை அச்சிற்பதிப்பிக்கதற்குப் பொருளுதவி செய்யும், கொழும்பு, செட்டியார் தெரு, முத்துவிநாயகர்கோயி லருச்சகரும், சரஸ்வதி புத்தகசாலை அதிபதியுமாகிய பிரமஸ்ரீ சி. பத்மநாப ஐயரவர்களைப் பாராட்டுகின்றேன்.

இங்ஙனம்,
க. குருமூர்த்தி ஐயர்.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பிரமோத்தர காண்டம்

காப்பு

நல்ல சொற்பொரு ளுஞ்ஞ நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

முதலாவது
ஸ்ரீ பஞ்சாக்ஷர மான்மியச் சருக்கம்

முன்னொரு கற்பத்திலே முனிவர்களுட் பலர் ஒருங்கு திரண்டு, பிரமதேவரிடஞ் சென்று, "நாங்கள் தவஞ் செய்யத் தகுந்த ஓரிடத்தைக் காட்ட வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ய; அவர் ஒரு தருப்பையை எடுத்து, *நேமியாக வளைத்துப் பூமியிலே உருட்டி, "இது சென்று தங்கு மிடத்தை யடைந்து தவஞ் செய்வீர்களாக" என அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள், அவர் சொல்லியபடி அது சென்று தங்கிய "நைமிசாரணியம்" என்னும் வனத்தை யடைந்து தவஞ் செய்யுங் காலத்தில், ஒருநாள் சிவ யாகம் ஒன்றை விருப்பத்தினோடும் செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது பதினெண் புராணங்களையும் உணர்ந்த சூத முனிவர் அங்கே வர, அவர்கள் அவருக்கு ஆசனம் சமர்ப்பித்து வணங்கித், "தேவரீர் சிவகதையை உபதேசிக்க வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அவர், "நீங்கள் விரும்பிய படி சிவகதைகளாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷர மகிமையையும், சிவராத்திரி

* நேமி — சக்கரம்.

மான்மியத்தையும், பிரதோஷ விரத மான்மியத்தையும், சோம வார விரத மான்மியத்தையும், சிவனடியார் மான்மியத்தையும், விபூதி மான்மியத்தையும், உமாமகேஸ்வர விரத மான்மியத்தையும், உருத்திராக்ஷ மான்மியத்தையும், புராண சிரவண மான்மியத்தையும், ஸ்ரீ ருத்திர மான்மியத்தையும உங்களுக்குச் சொல்கின்றோம் கேட்பீர்களாக" என்று திருவாய்மலர்ந்து பின் வருமாறு சொல்லுவாராயினார் :

"சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கும் கன்மயாகம், தபயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம் என்னும் ஐவகை யாகங்களுள்ளே செபயாகமே அதிகம். செபயாகமெனினும் மந்திரயாகமெனினு மொக்கும். இருக்கு முதலிய நான்கு வேதங்களுக்குஞ் சாரமெனப்படுவது ஸ்ரீ பஞ்சாக்ஷரமே. கொலை, மாமிச போசனம், மதுபானம் முதலிய பாவங்களை நீக்கிக், குருமுகமாகத் தீக்ஷை பெற்று விதிப்படி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபிப்பது பிறவிக் கடலை நீந்துவதற்கு ஓர் தோணியாகும். இப் பஞ்சாக்ஷரமே மந்திரங்கள் எல்லாவற்றிலும் மேலானது. பிரணவத்தை முதற் பெய்து இதனை ஜபித்து அநேகர் மோக்ஷத்தை அடைந்தார்கள். இது சிவபெருமானது திருவுருவம். இதன் உண்மை பரப்பிரமம் என்று பெரியோர் சொல்வர். இதனை ஜபிப்பதொன்றே மனிதருக்கு அமையும். யாகம், தானம் முதலியன இந்திரன் முதலிய இறையவர் பதங்களையே கொடுக்க வல்லன. இதுவொன்றே மோக்ஷத்தைக் கொடுப்பது. சூரியனெழ இருள் நீங்குவது போலப் பஞ்சாக்ஷரத்தை ஜபிக்கப் பாவங்கள் நீங்கும். இதனை உபதேசம் பெற்றவர்கள் அஷ்டமகாசித்திகளும் இயற்ற வல்லுநராவர். ஓரரசன் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைக் குருவிடம் உபதேசம் பெற்று உய்ந்தமையைச் சொல்லுவேம்; கேட்பீர்களாக" என்று கூறிச் சூத முனிவர் பின்வருமாறு சொல்லுவாராயினார் :

தசாருகன் தீக்ஷை பெறுதல்

வடமதுரையிலே, யதுகுலத்திலே, தசாருகன் என்னும் அரசனொருவனிருந்தான். அவன் பராக்கிரமசாலியாகி, மன்மதன் போன்ற அழகுடையவனாய், மனுநூற்படி செங்கோல் செலுத்தி வருங் காலத்தில், துருவாச முனிவரிடம் தீக்ஷை பெற்று, ஸ்ரீ

பஞ்சாக்ஷர உபதேசமடைந்து, அநுஷ்டானமும் ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபமுஞ் செய்யும் ஒரு இராஜ கன்னியை வேத விதிப்படி மணந்து, அன்றிரவு மலரணையில் அவளைப் புணர விரும்பி, அவளது கரங்களைப் பற்ற, அவ்வரச கன்னிகை ஒதுங்கி நின்று, "தேவரீர் அடியேனைப் புல்லுதல் தகாது" என்று கூறினாள். தசாருகன் அம்மொழியைச் சிறிதும் மனங்கொள்ளாது அவளை வலிதிற் பற்றினான். அப்பொழுது அரச கன்னியின் தளிர்போன்ற மேனி வெம்பி, வெம்பிக், கொல்லுலைபோலச் சுவாலித்துத் தசாருகன் மீது அக்கினியை யிறைத்தது. தசாருகன் மேனி வெம்பி, "இப்படி நிகழ்தற்குக் காரணம் யாது?" என்று வினவ; அரசகன்னி, "துருவாச முனிவரிடத்திலே தீக்ஷை யடைந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரோபதேசம் பெற்றதினால் என் சரீரம் நிருமலமாகியது. உம்முடைய பாவ சரீரத்தினால் என்னைப் புணர்தல் தகாது. பத்தினிகளிடம் உபதேசம் பெறுதல் நீதியன்று; ஆதலால், தேவரீர் அடியேனை யொழித்துக் கர்க்க முனிவரை யடைந்து தீக்ஷை பெற்று என்னோடு புணரக் கடவீர்" என்று கூறினாள்.

தசாருக மகாராஜன், அவள் கூறியபடி நினைந்து, யமுனை யாற்றங் கரையிலே ஓராச்சிரமத்திலே யோகம் புரிந்திருக்கும் கர்க்க முனிவரை யடைந்து வணங்கி அவரிடம் தீக்ஷை யடைந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரோபதேசம் பெற்றான். அப்பொழுது அவனது மயிர்த்துவாரங்களின் வழியாக, வினைகளெல்லாம் நூறு கோடி காக்கை வடிவங்களாகப் பறந்தன. தசாருகன் புனிதனாய்த் தன்னகரத்தை யடைந்து அநுஷ்டானமும், ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபமுஞ் செய்துகொண்டு மனைவியோடு வாழ்ந்து இன்பமனுபவித்துத் தன்னாட்டைச் செங்கோல் செலுத்தி நெடுங் காலமாயின பின் சிவப்பதப் பிராப்தியாயினான்; என்று சூத முனிவர் நைமிசாரணியத்து முனிவர்களுக்குச் சொல்லிப் பின் * சிவராத்திரி விரத மான்மியத்தையும் உபதேசித்துப் பின்வருமாறு பிரதோஷ விரத மான்மியத்தை அருளிச்செய்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்

---

* இங்கே சிவராத்திரி விரத மான்மியம் விரித்துணர்த்தப்பட்டதாயினும், இந்நூலின் புடைநூலாகவும், சிவராத்திரி புராணத்தின் வழிநூலாகவும் என்னு லியற்றப்பட்ட சிவராத்திரி புராண வசனத்திலே விரித்தோதப்பட்டமையின் இங்ஙனம் தொகுத்துக் கூறினேன்.

இரண்டாவது

பிரதோஷ விரதச் சருக்கம்

சந்திரசேனன் நோன்பு புரிதல்

உச்சினி நகரத்திலே, சந்திரசேனன் என்னும் அரசன், அங்கே எழுந்தருளியிருக்கும் மாகாளேசுரரைப் பிரதோஷ காலந்தோறும் பூசிக்கும் நியமமுடையவனாய் அரசு புரியுங் காலத்தில், ஒருநாள், மணிபத்திரர் என்னும் சிவகணநாதர் வந்து, அவனோடு நண்பு பூண்டு, சிந்தாமணி என்னும் தெய்வ மணியை ஈந்து சென்றனர். சந்திரசேனன், அச் சிந்தாமணியைத் தன் அழகிய மார்பிலே ஆரத்துடன் பூண்டு இலக்குமி தேவியின் கிருபையைப் பெற்று வாழ்ந்தான்.

மற்றைய அரசர்கள், அச் சிந்தாமணியின் மகிமையைக் கேள்வியுற்று, அதனைக் கவர விரும்பிச், சந்திரசேனனோடு போர் செய்யுமாறு நால்வகைப் படைகளையும் எழச் செய்து, உச்சினி நகரத்தைச் சூழ்ந்தார்கள். சந்திரசேனன், அவர்களுக்கு அஞ்சாது தூபம், தீபம், கர்ப்பூரம், திருமஞ்சனம், மலர் என்பனவற்றைக் கொண்டு மாகாளேசுரர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துட் சென்று அவரை அருச்சித்தான். அப்பொழுது, தன் தாயோடு ஆலயத்தில் வந்த இடைச் சிறுவனொருவன், அவன் பூசை செய்வதைக் கண்டு, பூர்வஜனனத்திலே செய்த புண்ணிய பலத்தினாலே சிவபெருமான் மீது பேரன்பு கொண்டு, ஓரிடத்திலே கருங்கல்லினைச் சிவலிங்கமாகத் தாபித்து, மணலாற் கோயில் கட்டி, பூக்களையும், பத்திரங்களையும், மஞ்சன நீரையுங் கொண்டு, சிவார்ச்சனை புரிந்தான். அவன் உண்ணுங் காலமாக; இடைச்சி அவனை வருமாறு அழைத்தாள். இடைச் சிறுவன், சிவபூசையிலேயே கருத்துடையவனாய் இருந்தமையால் வாளாவிருத்தலும்; இடைச்சி கோபங்கொண்டு, அவன் சிவலிங்கமாக வணங்குங் கல்லை அப்பால் வீசி, வீட்டை யடைந்தாள். இடைச் சிறுவன், மனம் வருந்திப் புலம்பி மூர்ச்சை யடைந்து, பின் விழித்தான், அவனது வீடு இந்திரனது அரண்மனை போலப்

பொற்குவை நிறைந்திருந்தது. இடைச்சி சரீரம் புளகித்து* மகிழ்ச்சி யடைந்து, சந்திரசேனனை யடைந்து நிகழ்ந்த சமாசாரத்தை விண்ணப்பஞ் செய்தாள். சந்திரசேனன், சேனைகள் புடை சூழ்ந்து சேவிப்ப இடைச்சியின் வீட்டை யடைந்து, அங்கே நிகழ்ந்த அற்புதத்தைக் கண்டு இடைச் சிறுவனைத் தழுவிப் புகழ்ந்தான். அடுத்த நாள், ஒற்றர்கள், நிகழ்ந்த சமாசாரங்களை யெல்லாம் பகைத்து வந்த தத்தம் அரசர்களுக்குக் கூற; அவர்கள், "சிவபெருமான் மீது பேரன்பு பூண்ட சந்திரசேனரோ டன்றோ. போர் செய்ய வந்தோம்! இவரோடு பகைக்கின் இறத்தல் திண்ணம்" என்று அஞ்சித் தத்தம் கடல் போன்ற சேனைகளை மீள அனுப்பிவிட்டு, நடந்து சென்று சந்திரசேனனைத் தரிசித்து வணங்கினார்கள். அப்பொழுது, இராமபிரானைத் தாங்கும் வன்மையைப் பெற்ற அனுமான் அங்கே வந்தனர். சந்திரசேனனும், இடைச்சிறுவனும், அரசர்களும் சென்று அவரை வணங்கினார்கள். அனுமான் சந்திரசேனனை ஆசீர்வாதம் புரிந்து, "இவ்விடைச் சிறுவனது எட்டாந் தலைமுறையில் விஷ்ணுமூர்த்தி கிருஷ்ணாவதாரங் கொள்ளும்பொழுது அவரை வளர்க்கும் பொருட்டு நந்தன் என்பவன் தோன்றுவான். இவனுக்குச் சீதரன் என்று பெயர் வழங்குக" என்றுகூறித் தமதிடத்தையடைந்தனர். அரசர்களும் விடைபெற்றுச் சென்றார்கள். சந்திரசேனனும், இடைச்சிறுவனும், இவ்வுலக வாழ்வை மிகத் துய்த்து ஈற்றிலே சிவபதத்தை யடைந்தார்கள்; என்று சூத முனிவர் அருளிச் செய்து பின்னுஞ் சொல்லுவாராயினர்.

சத்தியர்தனனும் தருமகுத்தனும் நோன்புபுரிதல்

விதர்ப்ப தேசத்திலே அரசுபுரிந்த சத்தியாதனன் என்னும் அரசன், சுக்கிலபக்ஷம், கிருஷ்ணபக்ஷம என்னும் இரண்டு பக்ஷத்திலும் வருகின்ற திரயோதசிததிதியிலே, சூரியஸ்தமயனத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகைக்கும் பின் மூன்றேமுக்கால் நாழிகைக்கும் இடையேயுள்ள காலமாகிய பிரதோஷ காலத்திலே, விதிப்படி நோன்பு புரிதலும சிவதரிசனமுமுடையவனாய் வாழுங் காலத்திலே, சாளுவதேசத்தரசனாகிய துன்மருஷணன் தனக்கு நட்பாகிய அரசர்களோடு

* புளகித்து – பூரித்து.

ஒருங்கு சேர்ந்து சத்தியாதனனைப் பகைத்து, விதர்ப்ப தேசத்தை முற்றுகை செய்து, சத்தியாதனனையும், அவன் சேனைகளையும் வதைத்தான். அன்றிரவு, சத்தியாதனனது பத்தினியாகிய சதி என்பவள், அவன் இறந்த சமாசாரத்தைக் கேள்வியுற்று, வயிற்றி லெற்றிப் புலம்பி, இருளிலே மேற்குத் திசை நோக்கித் தமியளாய்ச் செல்லுகையில், காட்டிலே ஒரு வாவிக் கரையை யடைந்து ஒரு புதல்வனையீன்று, பின் வருத்த மிகுதியினாலே நீர் வேட்கை கொண்டு அவ்வாவியிலிறங்க ஒரு முதலை அவளதுயிரை யுண்டது.

அடுத்த நாள், அவ்வரச குமாரன் புரப்பவர்களின்றி வாய் திறந்தழும்பொழுது, உமை என்னும் பார்ப்பன விதவை, தன்னோராண்டுச் சிறுவனைக் கையி லேந்திக்கொண்டு, அவ் வாவிக்கரையை யடைந்தாள். அங்கே, அவள் அந்த இராஜ குழவியைக் கண்டு "இளஞ் சூரியனைப் போலும், அழகுடைய இப்புதல்வன் யாவன்? இது வேதியர் குழந்தையோ! அரசர் குழந்தையோ!! இதற்கு நாபிக் கொடியரியாது இதன் தாய் நீங்கிய காரணமென்னையோ!!! நான் இதனை வளர்ப்பின் வேதியர்கள் முனிவார்களே" என்றிரங்கினாள். அப்பொழுது, அங்கே வந்த ஒரு முனிவர் நிகழ்ந்தவற்றை யெல்லாம் ஞான திருஷ்டியாலறிந்து அவ்வுமையை நோக்கி, "நீ இக் குழவியை வளர்ப்பையாயின் உன் குலமுய்யும்" என்றார். உமை உடன் பட்டு அக் குழவியைத் தாங்கிக்கொண்டு ஏகசக்கர நகரத்தை யடைந்து வறுமையினாலே பிச்சையேற்று, அதனையும் தன் சிறுவனையும் வளர்த்தாள். இப்படி நிகழும்பொழுது, ஒருநாட் சாண்டில்லிய முனிவர் வந்து அவ்வரச குமாரன் பிறந்த வரலாற்றைச் சொல்லிப் பின் வருமாறு சொல்லுவாராயினர்:

"இவனது தந்தையாகிய சத்தியாதனன், பூர்வ ஜனனத்திலே, மதுரை நகரத்திலே பாண்டிய ராஜனாகப் பிறந்து பிரதோஷ விரத மனுஷ்டித்தான். ஒருநாள், பிரதோஷ காலத்திலே, இவன் சிவார்ச்சனை செய்யும்பொழுது சோழன் முதலிய பகையரசர்கள் போர்செய்யுமாறெழுந்தார்கள். இவன், யுத்த சந்நத்தனாய் ஒரு தேரிலேறிச் சேனைகளோடு சென்றான். மந்திரி, அரசன் சிவபூசை செய்யும் சமயம் என்று எண்ணிப், படைகளோடு போருக்குச் சென்று, போர்செய்து, சோழராஜ

னைப் பிணித்து, மற்றைய அரசர்களை ஓடச்செய்து இவனது முன்னிலையில் விட்டான். அப்பொழுது, இவன் சோழனை வாளால் வெட்டி வதைத்துக் களிப்பினாலே சிவபூசையைச் செய்யாது, அன்னத்தை யுண்டான். அதனால் இப்பிறவியில் அற்பவயதுடையவனாய்ப் போகங்களை முற்றாய அனுபவியாது, பகைவர் வதைக்க மாண்டான். இக் குழவியும் பாண்டியனுக்குப் புதல்வனாகப் பிறந்து சிவபூசையில் வழுவிய அவனோடு புசித்தமையால் இப்பிறவியில் தாய் தந்தையரை இழந்து வறுமையுற்றது. இதன் தாய் பூர்வஜனனத்திலே அப்பாண்டியனுக்குப் பத்தினியாய் இருந்து மற்றைய மனைவியர்களை விடமூட்டிக் கொன்றமையால் முதலை வாயிற் புகுந்தாள். உனது புதல்வன் பூர்வஜனனத்திலே பிராமண வருணத்திலே பிறந்து தனிகனாயிருந்தான். ஆயினும் இவன் யாவர் கொடுத்தாலும் பேராசையினாலே பொருளை நன்று என்று சொல்லி மேன்மேலும் ஈட்டி வறியவர்களுக்குச் சிறிதும் அன்னமீயாது வாழ்ந்தான். அப் பாவத்தினாலே இம்மையில் வறிஞனாயினான். இவ்வரச குமாரனும் உன் புதல்வனும் சிவபெருமானைக் குறித்துப் பிரதோஷ விரத மனுஷ்டித்துச் சிவபூசை செய்வார்களாயின் அரசையும், செல்வத்தையும் பெறுவார்கள்.'' என்று அச் சாண்டில்ய முனிவர் சொல்லிப் பிரதோஷ விரத மனுஷ்டிக்கும் நெறியையும் சிவார்ச்சனை செய்யும் நெறியையும் அக் குமாரர்களுக்குபதேசித்துத் திருவடி தீக்ஷை புரிந்து, பஞ்சாக்ஷரோபதேசஞ் செய்து, "உங்களுள் வேதிய குமாரனுக்குச் சுசிவிரதன் என்றும், அரச குமாரனுக்குத் தருமகுத்தனென்றும், பெயர் வழங்குக" என்று நாமகரணஞ் செய்து ஆசிர்வாதஞ் செய்து தமதாச்சிரமத்திற் கெழுந்தருளினார்.

சுசிவிரதனுந் தருமகுத்தனும் அம்முனிவர் கூறியபடி பிரதோஷ விரத மனுஷ்டித்துச் சிவார்ச்சனை செய்யுங் காலத்தில், ஒருநாள், சுசிவிரதன் ஸ்நானஞ் செய்யும் பொருட்டு, ஆற்றங்கரைக்குச் சென்றான். அங்கே, அவன் ஒரு இடத்திலே திரவியம் இருக்கக்கண்டு மகிழ்ந்து, அதனை எடுத்துக்கொண்டு வீட்டை யடைந்து, தாயை நோக்கிச், "சிவபெருமானின் திருவருளினாலே கிடைத்த பயன் இது" என்று அவளிடம் அதைக் கொடுத்தான். உமை, "மைந்தர்களே, சிவபெருமா

னுடைய திருவருளினாலே கிடைத்த இத் திரவியத்தை இருவீருமாகப் பங்கிட்டுக் கொள்ளுங்கள்" என்றாள். அரசகுமாரனாகிய தருமகுத்தன் அது கேட்டு, "இச் செல்வம் எனது மூத்தவனுக்கே உரியது" என்றான்.

இவ்வாறு, அவர்கள் செல்வமோங்கி வாழுநாளிலே, ஓராண்டு நீங்கியபின், உத்தராயணத்திலே, இளவேனிற் காலத்திலே, அரசரும், பத்தினிகளும், இளைஞரும் பூங்காவிற் சென்று, அருவியாடியும், வாவியாடியும், சிலம்பெதிர் கூவியும், சிற்றிலிழைத்தும், கலந்திருந்தியும், கலவையாடியும் விழவயர்ந்தார்கள். அப்பொழுது தருமகுத்தன், சுசிவிரதனோடு, அப்பூங்காவிலே களிப்புடையனாய் உலாவும்பொழுது, வழிதவறி, அவனை நீங்கி வேறொரு வனத்திற் சென்று அதன் அழகைக் கண்டு மகிழ்ந்தான். அங்கே, அவன் திருக்கைலாசமலையிலே சிவபெருமானுடைய சந்நிதானத்தில் இசை பாடுகின்ற திரமிடன் என்னும், வித்தியதரனுடைய கன்னிகையாகிய அஞ்சுமதி என்பவள் தோழியர்களோடு விளையாடுதலைக் கண்டு, "இப்பெண் இலக்குமியோ! நாககன்னிகையோ! வரையரமகளோ! தெய்வப் பெண்ணோ! அன்றி எத்தன்மையள்" என்று எண்ணினான். அஞ்சுமதி அவனை நோக்கி, அழகிற் சிறந்த மன்மதனே ஈண்டு வந்தான் என்று மகிழ்ந்துத் தோழியரை, "அயல் வனத்திற் சென்று பூக்கொய்மின்" என்று பணித்துத் தருமகுத்தனை நோக்கி, "அரசனே, உம்மினும் அழகுடையவர் ஒருவருமில்லை, உமது வரலாற்றை உரைப்பீராக" என்றாள். தருமகுத்தன் தன் வரலாற்றை உரைத்து, "உனது வரலாறியா"தென்றான். அஞ்சுமதி "அரசனே, நான் திருக்கைலாச மலையிலே இசைபாடுகின்ற திரமிடன் என்பவனுடைய புதல்வி; கந்தருவ வேதத்திலே வல்லுநர் எனினும் பிறரில்லை; நீர் என்னைக் காதலித்தீர் என்பதைக் குறித்தேனாதலின் கந்தருவ வழக்கப்படி என்னை மணம் புரிதிரோ" என்று சொல்லித் தன் மார்பிலணிந்த முத்துமாலையை எடுத்துத் தருமகுத்தனது புயத்திலணிந்து புன்னகை செய்தாள். தருமகுத்தன், "அரசிழந்து வறுமையினால் வருந்துமென்னை நீ காதலித்தனை; உன் தந்தையறியின் யாதாய் விளையும்," என்றான். அஞ்சுமதி, "எனது தந்தையும் என்னை உமக்கே நேர்குவர்; நாளை இங்கு வருவீ

ராக" என்று சொல்லி, ஆயத்தோடு திருக்கைலாசமலையை யடைந்தாள். தருமகுத்தன் வீட்டையடைந்து சுசிவிரதனுக்கும் உமைக்கும் நடந்த சமாசாரத்தைக் கூறினாள்.

அடுத்த நாள், தருமகுத்தன், அஞ்சுமதி சொல்லியவாறு பூஞ்சோலையை யணைந்தான். அங்கே அஞ்சுமதியோடு இவன் வருகையை நோக்கியிருந்த திரமிடன் இவனைக் கண்டு மகிழ்ந்து, "அரசகுமாரனே, வருக" என்று கூறிப் பக்கத்திலே இருத்தித் தழுவிச் சிவபெருமான் உனது வரலாற்றை எனக்குச் சொல்லி, "நீ அரசடையுமாறு துணைசெய்யும்படி எனக்குக் கட்டளையிட்டார். இந்த அஞ்சுமதியும் உனக்கே உரியள்" என்று கரகநீர்பெய்து அஞ்சுமதியைக் கொடுத்து, பொன், இரத்தினம், இரதகஜதுரகபதாதி என்னும் நால்வகைச் சேனை, மழு, கவசம், வில், அம்பறுத்தூணி, வேல், வாள் என்பவைகளைக் கொடுத்து வாழ்த்தித் திருக்கைலாசமலையை யடைந்தான்.

பின்பு, தருமகுத்தன் குலத்துரிமையாகிய விதர்ப்பதேசத்தை யடைந்து, துன்மருஷணன் முதலிய அரசர்களைப் போர் செய்து வதைத்துச் சுபமுகூர்த்தத்திலே, வேதியர்கள் மணிமுடி சூட்ட இப்பூமியை அரசுபுரிந்து சிவபதத்தை யடைந்தான். என்று சூதமுனிவர் நைமிசாரணியத்து முனிவர்களுக்குச் சொல்லிப் பின்வருமாறு சோமவார விரத மகிமையை அருளிச் செய்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்

மூன்றாவது

சோமவார விரதச் சருக்கம்

சீமந்தனி நோன்பு புரிதல்

ஆரியாவர்த்தநாட்டிலே, சித்திரவருமன் என்பவன் மனுநீதி தவறாது செங்கோல் செலுத்திவருங் காலத்திலே அவன் சில புத்திரர்களை யீன்று, பின்பு சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து, சீமந்தனி என்னும் புதல்வியைப் பெற்று மகிழ்ந்து, வேதியர்களை அழைத்துச் சாதகபலத்தை யாராயும்பொழுது, ஒரு வேதியன், "இப்புதல்வி பதினாயிரம் வருஷம் நாயகனோடு நல்வாழ்வெய்துவள்" என்றான். சித்திரவருமன் அவனுக்குப் பொன் கொடுத்து வழிவிட; மற்றொரு வேதியன் அவனை நோக்கி, "அரசனே! உன் புதல்வி பதினன்காம் பராயத்தில் மங்கல்யம் இழப்பாள்" என்றான். அரசன் அதனைக்கேட்டு வெய்துயிர்த்து, அவனுக்குப் பரிசிலளித்தனுப்பிவிட்டு வாழ்ந்தான்.

சீமந்தனிக்கு மங்கைப் பருவம் வந்தபின், சேடியர் அவளை நோக்கி, "அன்னையே நீ பதினன்காம் பராயத்தில் மங்கல்யத்தை இழப்பாய் என்று நீ பிறந்த காலத்தில் வேதியர்கள் சொன்னார்கள்" என்று கூறச்; சீமந்தனி யாஞ்ஞவல்க்கிய முனிவரது பத்தினியாகிய மைத்திரை என்பவளை யடைந்து வழிபட்டு நிகழ்ந்ததைக் கூறினள். மைத்திரை அவளை நோக்கிக், "கார்த்திகை மாதத்து முதற் சோமவாரந் தொடங்கிச் சோமவாரந்தோறும் விரதமனுஷ்டித்து ஒரு வேதியனையும் அவன் பன்னியையுஞ் சிவபெருமானாகவும் உமையாகவும் பாவித்துப் பூசிப்பையாயின் உன்கவலை யொழியும்" என்றாள். சீமந்தனி மாளிகையை யடைந்து அவள் கூறியபடி அச் சோமவார விரதத்தை யனுஷ்டிக்குங் காலத்திலே, சித்திரவருமன், நளமகாராஜாவினது புதல்வனாகிய இந்திரசேனனுக்குப் புதல்வனாகப் பிறந்த சந்திராங்கதனுக்குச் சீமந்தனியை மணஞ்செய்வித்தான். சந்திராங்கதனும், சீமந்தனியும், பாலும் நீரும், போல ஒன்றிவாழுங் காலத்திலே, யமுனையாற்றிலே புதுநீர்வரச்

சந்திராங்கதன் தன் தோழர்களுடன் பொழுதுபோக்குதற் பொருட்டு ஒரு தோணியிலேறிச் செலுத்தினான். அத் தோணி செல்லும்பொழுது திரை எடுத்து வீசுதலினாலும், மனிதர்கள் நெருங்குதலினாலும், வேகத்தினாலும் தாங்கவியலாது கவிழ்ந்தது. சந்திராங்கதனும், தோழர்களும் நீரிலே ஆழ; அத் தோழர்களை முதலை விழுங்கியது. சந்திராங்கதன் நல்வினை வசத்தினாலே பிலவழியாக நாகர்கள்வசிக்கும் பாதாளலோகத்தை யடைந்து ஒரு நதிக்கரையைச் சார்ந்தான். அந் நதியிலே நீராடுகின்ற நாககன்னியர்கள் சந்திராங்கதனைக் கண்டு, அவனது அழகை நோக்கி மகிழ்ந்து, "எங்களரசனாகிய தக்ஷகனிடத்து வருதிர்" என்று கூறி, அவனை யழைத்துக்கொண்டு சென்று தக்ஷகனது சந்நிதியில் விட்டார்கள். சந்திராங்கதன் ஆயிரஞ் சூரியர்களது ஒளி பிரகாசிப்பது போல ஆயிரம் முடியினும் இரத்தினங்கள் ஒளிவீச வீற்றிருக்கும் தக்ஷகனைக் கண்டு வணங்கினான். தக்ஷகன் அவனது வரலாற்றைக் கேட்டு நிகழ்ந்தவற்றை யுணர்ந்து, "நீவிர் வழிபடும் கடவுள் யாவர்" என்றான்.

சந்திராங்கதன் அவனை நோக்கிச் "சர்வான்மாக்களுக்கும் சர்வலோகத்துக்கும், நாயகராய்த் தேவாதிதேவராய், இராஜத குணத்தினாலே பிரமதேவரை அதிட்டித்துநின்று படைத்தலும், சத்துவ குணத்தினாலே விஷ்ணுமூர்த்தியை அதிட்டித்து நின்று காத்தலும், தாமதகுணத்தினாலே உருத்திரரை அதிட்டித்து நின்று அழித்தலும் செய்பவராய், வேதமுதல்வராய், மூதக் காரணராய்ச், சோதிரூபராய், ஆகாயம் முதலிய பூதங்களுக்கு உள்வீடாய், ஆன்மசாக்ஷியாய், உலகெல்லாம் தம்வயத்தொழுக நிற்பவராய், ஏகராய், முதல்வராய், வேண்டுவார் வேண்டுவதை யீபவராய், மூக்குணாதீதராய், மனாதிகட்கெட்டாதவராய், வேத சிரசுகளாலே துதிக்கப்படுந் திருவடிகளை யுடையவராய், மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறத்துவாக் களினும் வீற்றிருப்பவராய் விளங்கும் சிவபெருமானே எங்களால் வழிபடப்படும் கடவுள்" என்றான். தக்ஷகன் அதனைக் கேட்டு மகிழ்ந்து "இப்பாதாளலோகம் மாணிக்கமயமாக விளங்கும். இங்கே வாழும் நாகமகளிரை மணம்புரிந்து, நரைதிரை யின்றி உறைவாயாக" என்று சொல்லச் சந்திராங்கதன்,

"எனது பிதாவுக்கு என்னையன்றி வேறு புதல்வர்களில்லை. என் மனைவியுஞ் சிறியள்; யான் ஆற்றிலே ஆழ்ந்தது கேட்டு அவர்கள் இறந்தார்களோ அறியேன். ஆதலால் என்னை விடுப்பீராக" என்றான். தக்ஷகன் மகிழ்ந்து, ஆபரணம், பீதாம்பரம், இரத்தினம், பொன் முதலிய செல்வங்களையும், பத்துத்திக்குகளிலும் செல்லும் வன்மையினையுடைய ஒரு குதிரையையும் கொடுத்து ஒரு நாககுமாரனிடத்துச், "சந்திராங்கதனைக் காக்குதி" என்று கட்டளையிட்டு அவனை அனுப்பினான். சந்திராங்கதன், தக்ஷகனைத் தொழுதுகொண்டு விரைந்து நாககுமாரனோடும் கடலினின்றும் இளஞ்சூரியன் எழுதல்போல யமுனையாற்று நீரின் மேலே எழுந்து கரையையடைந்தான். நிற்க,

சந்திராங்கதன் தோழர்களோடுந் தோணி கவிழ்ந்து யமுனையாற்று நீருள் வீழ்ந்த சமாசாரத்தை, அவன் மாதுலனாகிய சித்திரவன்மன் கேள்வியுற்று, அவ் வாற்றங்கரையையடைந்து, சுற்றத்தார்களோடு மனத்துயரங்கொண்டான். சீமந்தனியும் நாயகனிறந்த சமாசாரத்தைக் கேள்வியுற்றுப் புலம்பி அழுது அக்கினிப் பிரவேசஞ் செய்யுமாறு துணியச்; சித்திரவன்மன் அவள் மாளிகையையடைந்து, தேற்றத்தேறி தாபத நிலையையடைந்து சிவபெருமானைப் பூசிப்பதில் காலங்கழிப்பவளாயினாள். இந்திரசேனன் தன்புதல்வனிறந்த சமாசாரத்தைக் கேள்வியுற்றுத் துயர்க்கடலுளாழ்ந்து வருந்த; அவன் பகைவர்கள் இரதகஜதுரகபதாதி என்னும் நால்வகைச் சேனைகளையும் எழுச்சிகொண்டு நிடதநாட்டைக் கவர்ந்து அவ்விந்திரசேனனைச் சிறைவைத்தார்கள். இது கிடக்க,

சந்திராங்கதன், யமுனையாற்றங் கரையில் குதிரைமேற் தோன்றும்பொழுது அங்கே ஆயத்தோடு நீராடவந்த சீமந்தனி அவன்மேல் மனம் மறுகுற்று நிற்கச்; சந்திராங்கதன் அவளையடைந்து, "நங்கையே நீ யார்; இளம்பாரியத்தினளாகிய நீ கைமையாக இருக்கக் காரணமென்னை?" என்றான். சீமந்தனி அதனைக்கேட்டு நாணமடைந்து ஒதுங்க; ஒரு தோழி, "எங்கள் நாயகியாகிய இவள் பூமிமுழுவதையும் ஒரு குடைநீழலில் அரசுபுரிந்த சந்திராங்கதனை மணம்புரிந்தவள். அவன் யமுனையாற்று நீருள் வீழ்ந்திறந்தமையால் இவள் கைமையாயினள். சந்திராங்கதனது பிதாவையும் பகைவர் சிறையிட்ட

னர்" என்றாள். அப்பொழுது சீமந்தனி சந்திராங்கதனை நோக்கி, "அடியேனது மனத்தைக் கன்றுமாறு செய்த நீவிர் யாவிர்" என்று வினவச்; சந்திராங்கதன் அவளது கரத்தைப் பற்றி, "நான் எல்லா உலகங்களையும் விரைவிற் சென்றுவரக் கற்ற விஞ்சையன்; வேற்றுலகில் வசிக்கும் உனது நாயகனை நீ விரைவில் அடைந்து துன்பம் நீங்குவாய்; எனது தாதைக்கும் மாதாவுக்கும் உற்ற துன்பத்தை நீக்க இப்பொழுது செல்லுகின்றேன்." என்று கூறிக், குதிரையைத் தூண்டி விரைவிற் போயினான். சீமந்தனி மனங்கலங்கி, "என் மனம் சந்திராங்கதனிடத்தன்றி வேறொருவர்பாற் செல்லத்தகுந்ததோ? இப்பொழுது தோன்றிய இவனே எனது நாயகன்; யாஞ்ஞவல்க்கிய முனிவரது பத்தினியாகிய மைத்திரா தேவியின் உபதேசப்படி சோமவாரத்தில் சிவபெருமானையும், உமையம்மையையும் வழிபட்ட பயன் இதுவேயாகும்." என்று தோழியர்களுக்குச் சொல்லி மனம் கவன்று மாளிகையையடைந்தாள்.

பின்பு, சந்திராங்கதன் நிடதநாட்டில் அயலிலுள்ள ஒரு சோலையை யடைந்து தோழனாகிப் நாககுமாரனை நோக்கி, "நான் வரம்பெற்று வந்த வரலாற்றைப் பகைவர்களுக்குச் சொல்லி, எனது பிதாவைச் சிறை நீக்கி நிடதநாட்டையும் என்னிடம் தருமாறு சொல்லுவாயாக" என்றான். நாககுமாரன் அவன் சொல்லியவாறு பகைவரை யடைந்து நிகழ்ந்ததை உரைப்ப; அவர்கள் அச்சமடைந்து இந்திரசேனனைச் சிறை விட்டு நிடதநாட்டினின்றும் நீங்கினார்கள். சந்திராங்கதன் மகிழ்ந்து இந்திரசேனனையும் அவன் மனைவியையும் வணங்க அவர்கள் சந்திராங்கதனைத் தழுவி மேனி புளகங்கொண்டு அவன் யமுனையாற்றுள் அமிழ்ந்திய பின் நிகழ்ந்த வரலாற்றைச் சொல்லக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

இந்தச் சமாசாரங்களை யெல்லாம் சொல்ல அறிந்த ஆரியாவருத்த தேசாதிபதியாகிய சித்திரவன்மன் உடல் பூரித்துச் சீமந்தனியிடம் இவற்றைச்சொல்லி அவளை அலங்கரித்துத் தேரில் அவளுடனேறி நால்வகைச்சேனைகளும் சூழ நிடத தேசத்தை யடைந்து வேதியர்கள் சொல்லியபடி சந்திராங்கதனுக்குச் சீமந்தனியை மறுமணம் புணர்த்தித் தனது நாட்டை யடைந்தான். இந்திரசேனன், தனது குமாரனாகிய சந்திராங்

கதனுக்கு மணிமுடி சூட்டி வனத்தை யடைந்து தவஞ்செய்தான். சந்திராங்கதன் சீமந்தனியோடு எட்டுப் புதல்வர்களையும். ஒரு புதல்வியையும் ஈன்று பதினாயிரம் வருஷம் வாழ்ந்தான்.

2. சீமந்தனி பாவனை புரிதல்

அங்ஙனம் அவர்கள் வாழுங் காலத்திலே, வைதர்ப்பநாட்டிலே வசித்த வேதமித்திரன் என்னும் அந்தணன், சுமேதா என்பவனையும், சார்ச்சுதன் என்னும் அந்தணன், சாமவான் என்பவனையும் ஈன்று வேதாத்தியயனஞ் செய்வித்து, "நீவிர் நம தாசனிடத்தே சென்று உங்கள் கல்வியினாலே அவன் மனத்தைக் கனிவித்துப், பரிசில் பெற்று மணம்புரிந்து வாழ்திர்" என்றார்கள். சுமேதாவும், சாமவானும் அரசனையடைந்து தங்கள் விஞ்ஞைத்திறனை நிகழ்த்தலும், வைதர்ப்ப தேசாதிபன் மகிழ்ந்து உங்களுக்கு வேண்டியவை யாவை என்றான். சுமேதாவும், சாமவானும், "உம்மிடம் பொருள் பெற்றுக் கொண்டுபோய் மணம் முடிக்க வந்தேம்" என்று சொல்ல; அரசன் நகைத்து "நிடத தேசத்தரசன் பத்தினியாகிய சீமந்தனி சோமவாரந்தோறும் விரதமனுஷ்டித்து வேதியர்களைப் பத்தினியுடன் வருமாறு சொல்லி, அவர்களைச் சிவபெருமானாகவும், உமையம்மையாகவும் பாவனைபண்ணி வழிபட்டுச் செம்பொன்னைத் தானஞ் செய்கின்றாள். உங்களுள் ஒருவன் ஆண்டகையாகவும், மற்றவன் மனைவியாகவும் அலங்கரித்துச் செல்லுதிர்" என்றான். சுமேதாவும் சாமவானும் அவ்வாறு செய்ய அஞ்சி மறுக்க; அரசன், "இனி உங்களைத் தண்டிப்பேன்" என்றான். சுமேதாவுஞ் சாமவானும், "யாதுசெய்வேம்" என்று இரங்கிச் சாமவான் அழகிய பெண் வடிவங்கொள்ளச்; சுமேதா அவனைப் பத்தினியாகக் கொண்டு அவ்விடத்தினின்றும் நீங்கினான். அரசன் அவர்களைப் பார்த்து மகிழ்ந்தான்.

சுமேதாவும் சாமவானும் முறையே நாயகனாகவும், நாயகியாகவும் வேடங்கொண்டு, நிடதநாட்டையடைந்து சீமந்தனியின் மாளிகைக்குச் செல்ல; சீமந்தனி அவர்களைக் கண்டு எதிர் சென்று பாத்தியார்க்கியாசமனீயங் கொடுத்து அங்கேயிருந்த மற்றைய பிராமணர்களோடு இருக்குமாறு ஆசனங்கொடுத்துப், பிராமணர்களைச் சிவபெருமானாகவும் அவர்கள் பத்தினிகளை உமையம்மையாகவும் விபாவித்துப் பூசைபுரிந்து; பால், பழம்,

தேன், கருப்பஞ்சாறு என்பவைகளையும், சிற்றுண்டியையும், அன்னத்தையும் அளித்துச்; சந்தனம், மாலை, பீதாம்பரம், தாம்பூலம், என்பவைகளை உதவித் தன் சோமவார விரத நெறியை அனுஷ்டிக்கும்பொழுது, சாமவானது பெண் வடிவத்தைக் கண்டு வறிது நகைத்துப், "பெண்வடிவத்தையுடைய இவன் உமையம்மையே யாவன்" என்று அவனையும், உமையம்மையாக விபாவித்து வழிபட்டு அவனுக்கும் நாயகன் வடிவங்கொண்ட சுமேதாவுக்கும் மற்றைய பிராமணர்களுக்குத் தானஞ் செய்தமைபோலத் தானஞ்செய்து வழிவிட்டாள். வழியிலே செல்லும்பொழுது சீமந்தனியின் பாவனையினாலே சாமவான் பெண்ணுறுப்புக்களைப் பெற்று, முன்பு தான் ஆடவன் என்பதையும் மறந்து சுமேதாவை நோக்கி, "நாயகனே, நீர் போதலொழிந்து இங்கே வரும் இலதாக்கிருகத்திலே என்னைப் புணர்ந்து, என் விரகநோயை நீக்குவீராக. பெண்கள் விரும்பும்பொழுது காளையர் மறுத்தல் மகா பாதகமாகும். என்னைப் புணராது மறுத்திரேல் நான் இறத்தல் திண்ணம் என்றான். சுமேதா அவன் கூறுதலைக் கேட்டுத் தனது தோழனாகிய சாமவான் விநோதமாக இங்ஙனம் சொல்லுகின்றான் என்று நினைத்துக்கொண்டு அப்பாற் செல்லும்பொழுது, சாமவான் மீண்டும் தடுத்து, "என்னைப் புணர்ந்தன்றி அப்பாற் செல்லேல்" என்று சொல்லச்; சுமேதா, அவனது முகத்தைப் பொருக்கெனப் பார்த்து அவன் ஆண்வடிவற்று அழகிய பெண்ணாகத் தோன்றுதல் கண்டு அதிசயித்து, "உண்மையைச் சொல்லுதி" என்றான். சாமவான், "நான் உனது தோழனாகிய சாமவான் என்பவன். சீமந்தனி உமையம்மையாக என்னைப் பாவித்தமையினாற் பெண்ணுருப் பெற்றேன். எனக்குச் சாமவதி என்று பெயர் வழங்குக" என்று கூறி அவனுக்குத் தனது பெண்ணவயவம் புலப்படுமாறு நிற்கச்; சுமேதா, "உனது தந்தையாகிய சார்ச்சுதருக்கு நிகழ்ந்த சமாசாரத்தைக் கூறித் தவம்புரிந்து உனது வடிவத்தை அடைதி" என்றான். அப்பொழுது சாமவானாக இருந்த சாமவதி விரகநோய் அதிகரித்தலினாலே அவனை வலிந்து பற்றிப் புணர்ந்தாள்.

பின்பு, சுமேதனது தந்தையாகிய வேதமித்திரனையும், சாமவான் தனது தந்தையாகிய சார்ச்சுதனையும் அடைந்து நிகழ்ந்த சமாசாரங்களை யெல்லாம் சொல்லச்; சார்ச்சுதன்

வெகுண்டு விதர்ப்பதேசத்தரசனை யடைந்து, "அரசனே, வறியோர் உம்மிடம் பொருள் யாசித்தால் ஏதும் ஈதல் தக்கது. அதுவன்றி இல்லை என்று சொல்லி அவர்களை அனுப்பிவிடலாகும். இவையொழிந்து கபடமாகச் சூழ்ச்சி புரிந்து எனது புதல்வனைச் சீமந்தனியிடம் அனுப்பிப் பெண்ணாக்கினீர். பிராமணனாகிய எனக்கு ஈமக்கடன்கள் புரியப் புதல்வர்களில்லை. உம்மைச்சபித்து எனது உயிரையும் இவ்விடத்திலே நீப்பேன்" என்றான். இவற்றைக் கேட்ட அரசன் உத்தரமுரைக்க வறியாது முட்பன்றி கிழித்த வருத்தத்தால் பூமியில் வீழ்ந்த புலிபோல வீழ்ந்து புலம்பிப், பின்னெழுந்து முனிவர்களை வணங்கி, "இவ்வந்தணரது வருத்தத்தையும் எனது பாவத்தையும் நீக்குமாறு பெண் வடிவத்தை யடைந்த சாமவான் தன் வடிவத்தை அடைதற்கு அருள்புரிய வேண்டும்" என்றிரந்தான். அப்பொழுது, பாரத்துவாச முனிவர் அவனைப் பார்த்து, "உமையம்மையைப் பூசித்தால் உனது எண்ணம் நிறைவேறும்" என்றார். அரசன், அவர் சொல்லியவாறு அர்த்தசாமத்திலே சிவாலயத்துக்குச் சென்று உமையம்மையை அருச்சனை புரிய, உமையம்மை அவனது ஊனக்கண்கள் களிக்குமாறு எழுந்தருளி, "உனக்கு வேண்டும் வரம் யாது" என்றருளிச் செய்தார். அப்பொழுது அரசன் வணங்கிச், "சாமவானது பெண்மையை நீக்கி அருள வேண்டும்" என்று பிரார்த்திக்க; உமையம்மை எமது அடியார் இட்ட சாபத்தை நீக்குதல் ஈசனுக்கும் இயலாது; ஆகையால் சார்ச்சுதனுக்கு வேறோராண்மகவைக் கொடுத்தேம். சாமவதி என்று வழங்கும் இப்பெண்ணைச் சுமேதாவுக்கு மணம் புரிவிப்பாயாக" என்றருளிச்செய்து மறைந்தருளினார்.

பின்பு, அரசன் மாளிகையை யடைந்து நிகழ்ந்த செயல்களைச் சார்ச்சுதனுக்குச் சொல்லிச், சாமவதியைச் சுமேதாவுக்கு மணம் புரிவித்தான். சார்ச்சுதன் சில காலம் சென்றபின்பு ஓர் ஆண் மகவை யீன்று மகிழ்ந்தான்; என்று சூதமுனிவர் சீமந்தனி விபாவனை புரிந்த சரித்திரத்தை அருளிச்செய்ய, நைமிசாரணியத்து முனிவர்கள், "தேவரீர் சிவனடியார்களது மகிமைகளையும் அருளிச்செய்ய வேண்டும்" என்று வினவ, அவர் சொல்லுவாராயினார்.

திருச்சிற்றம்பலம்

நான்காவது

சிவயோகியர் மகிமைச் சருக்கம்

பத்திராயு வுற்பத்தி

அவந்திநாட்டிலே, மந்தரன் என்னும் அந்தணன், அளவில்லாத திரவியத்தைப் பெற்று வாழுங் காலத்திலே, செல்வக் களிப்பினால் சந்தியாவந்தனம் சிவபூசை முதலியன செய்தலின்றி இழிகுலத்திற் பிறந்தவர்களேயாயினும் பெண்கள் அகப்படின் மகிழ்ச்சியடைந்து அவர்களைப் புல்லிக், கட்குடித்தலும், மாமிச போசனஞ் செய்தலும் உடையனாய் ஒழுகினான். ஒரு நாள், சிவபெருமானைத் தியானம் புரிந்து யோக நெறியை அனுஷ்டிக்கும் விடபமுனிவர், அவனில்லத்திற் கெழுந்தருள; மந்தரன், தன் பத்தினியுடன் எதிர்சென்றழைத்துவந்து பாத்தியார்க்கியாசமனீயங் கொடுத்து உபசார வார்த்தை சொல்லி, ஓராசனத்திலே யிருத்திப்; பால், மாங்கனி முதலியன அருத்தி, அன்றிரவு முனிவர் நித்திரை புரியும்பொழுது அவரது இரண்டு பாதங்களையும் வருடி மகிழ்வித்தான். அடுத்த நாள், வைகறையில் விடபமுனிவர் எழுந்து அப்பாற் சென்றனர். மந்தரனும் அவன் மனைவியும் சிலநாட் சென்றபின் இறந்தார்கள்.

மந்தரன், அடுத்த ஜனனத்திலே தசாணை நகரத்தை அரசுபுரியும் வச்சிரவாகுவின் பத்தினியாகிய சுமதியின் வயிற்றிலே, கருப்பமாக அமருங்காலத்தில், அவ்வச்சிரவாகுவின் மற்றைய மனைவியர் பொறாமை கொண்டு அவளுக்கு விடத்தை அருத்தினார்கள். சுமதி அவ் விடத்தினாலே வயிறெரிந்து மேனி கருகி; ஊழ்வினை வசத்தினாலே இறவாது, அழிநோயினால் வருந்துகின்ற புதல்வனாக அம் மந்தரனை யீன்றாள். அப்பொழுது வச்சிரவாகு "சுமதியின் நோயையும், அவள் புதல்வனது நோயையும் நீக்குவீர்களாக" என்று வாகடர்களுக்குக் கட்டளையிட்டான். வாகடர்களது மருந்துக்கும் நோய் குறையாது மிகுந்தது. வச்சிரவாகு தினந்தோறும் சுமதியும் அவள் புதல்வனும் நோய்க்காற்றாதழ, நித்திரையின்றி வருந்தித் தேர்ப் பாகனைக் கூவி, "இச் சுமதியையும் புதல்வனையும்

காட்டிலே விட்டு வருதி” என்றான். தேர்ப் பாகனும் அவ்வாறே அவர்களைக் காட்டிலே கொண்டுபோய் விட்டான். சுமதி புதல்வனோடு காட்டிலே தமியளாய், நோய் முதிர்வினாலும், சூரிய கிரணத்தினாலும் வருந்தி, பேயும், புலியும், பன்றியும் வருத்தக்; கால்களில் முட்களுறுத்த வருந்தி அழுது புலம்பிப் பசியுடையவளாய், ஒருவாறு மெல்ல மெல்ல அக் காட்டை விட்டு நீங்கி ஒரு நகரத்தை யடைந்தாள். அங்கே, இவளைப் பதுமாகரன் என்னும் வணிகனது பத்தினி கண்டு வரலாறு முழுவதையுங் கேட்டு இரக்கமடைந்து பதுமாகரனுக்கு விண்ணப்பிக்கப் பதுமாகரன் அச் சுமதியையும், புதல்வனையும் ஒரு வேதியனது மனையிலே அமர்த்தி, வாகடர்களை யழைத்து அவ் அரசகுமாரனுக்கு வைத்தியஞ் செய்விக்கவும் நோய் தணியாது அவனிறந்தான். சுமதி ஆற்றாதழுது புலம்பினாள்.

அப்பொழுது, விடபமுனிவர் அங்கே வரச் சுமதியும் வணிகனும், அவரை வணங்க, விடபமுனிவர் அவர்களைத் தேற்றச் சுமதி தேறாது சாகத் துணிந்தாள். விடபமுனிவர், அதுகண்டு, அப் புதல்வன் பூர்வஜனனத்திலே தனக்குபசாரஞ் செய்த மந்தரன் என்னும் வேதியன் என்பதை யுணர்ந்து, விபூதியை எடுத்து அவன் நெற்றியிலே சாத்திக் காதிலே மூலமந்திரத்தை ஜபித்தார். அப்பொழுது அவ் இராஜகுமாரன் துயில் நீங்கியவர்கள் போலெழுந்து சுமதியிடம் முலைப்பாலையுண்டான். சுமதி அவனைப் புல்லி மகிழ்ந்தாள். விடபமுனிவர் சுமதிக்கும் புதல்வனுக்கும் விபூதியிட்டு அவர்களது நோயை நீக்க; அவர்கள் பொன் போன்ற வடிவுடையவர்களாயினார்கள். இவைகளைக் கண்டவர்கள் அதிசயித்தார்கள். விடபமுனிவர் அரசகுமாரனுக்குப் பத்திராயு வென்று நாமகரணஞ் செய்து அவனையும் சுமதியையும், ஆசிர்வதித்து, “இப் புதல்வன் சகலகலைகளையும் ஓதியுணர்ந்து அரசாட்சியைப் பெற்று வாழ்க” என்று வாழ்த்திச் சென்றார். நிற்க,

பத்திராயு அரசியல் புரிதல்

சந்திராங்கதனுஞ் சீமந்தனியும் வாழுங் காலத்திலே, பிங்கலை என்னும் கணிகை ஓரிரவு, விடபமுனிவரது பாதங்களை வருடிச் செய்த வழிபாட்டினாலே அவர்களுக்குப் புதல்வி

யாகப் பிறந்து, கீர்த்திமாலினி என்னும் நாமம்பெற்றுப் புத்தியாற் சரஸ்வதிதேவியும், பொற்பினால் இலக்ஷ்மியும் தோல்வியுற வளர்ந்தாள். இப்படி நிகழுங் காலத்திலே, பத்திராயுவும் பதுமாகரன் என்னும் அவ் வணிகனது புதல்வனாகிய சுனதனும் உபநயனஞ்செய்யப்பெற்று வேதம், வேதாங்கம், உபவேதம், என்பவைகளைக் கற்றுக் கௌமார பருவத்தையடைந்த காலையில், விடபமுனிவர், அங்கே எழுந்தருளிவந்து அவ்விருவரையும் ஆசீர்வதித்துப் பத்திராயுவுக்கு அரசநீதியையுஞ், சிவகவசத்தையும் உபதேசித்துச் சென்றார். நிற்க, ஒரு நாள் மகத நாட்டை யரசுபுரியும் ஏமரதன் என்னும் பெயரையுடைய அரசன் பத்திராயுவின் தந்தையாகிய வச்சிரவாகுவோடு இகல்கொண்டு, இரதகஜதுரகபதாதி என்னும் நால்வகைச் சேனைகளுடன் தசானன நகரத்தை முற்றுகைபுரிந்து, அவ் வச்சிரவாகு வந்து போர்புரிய; அவனை வென்று பாசத்தினாற் கட்டித் தேர்த்தட்டிலிட்டு வெற்றிமுரசஞ் சாற்றித் திரவியத்தைக் கவர்ந்து சென்றான். இச் சமாசாரத்தை வழியிற் செல்லுகின்றவர்கள் பத்திராயுவுக்குச் சொல்ல, அவன் வெகுண்டு வாளை உடையினின்றும் கழித்து ஏமரதனை வழிமறித்துப் போர்புரிந்து, ஒரு தேரிலே வந்த போர்வீர னொருவனை வதைத்து, அவனது தேரின் மீது ஏறிச், சுனதன் சாரத்தியம்புரிய, வலிய சிங்கமொன்று மான் கூட்டத்திற் பாய்வது போல ஏமரதனின் சேனையுட் புகுந்து அவற்றை வதைத்து அவனை விலங்கிட்டு வச்சிரவாகுவிடம் கொடுத்து, "இவனை யான் வருந்துணையும் விடாதிர்" என்றான். வச்சிரவாகு மகிழ்வடைந்து "என்னை இரக்ஷித்த வீரனே நீ யார்?" என்றான். "பத்திராயு என்னது வரலாற்றைப் பின்பு கூறுவேன். பத்திராயு என்பது எனது நாமம், இவன் பெயர் சுனதன்; நாமிருவரும் இவனது தந்தையாகிய வணிகனிடம் வாழ்கின்றேம்" என்று கூறித் தாயையடைந்து நிகழ்ந்த சமாசாரங்களை எல்லாம் விண்ணப்பஞ் செய்தான். வச்சிரவாகு தன்னாட்டை யடைந்து பகையின்றி வாழ்ந்தான்.

பின்பு, விடபமுனிவர் நிடத தேசத்தை யடைந்து, சந்திராங்கதனையும், சீமந்தனியையும் அவர்களது புதல்வியாகிய கீர்த்திமாலினியைப் பத்திராயுவுக்கு மணம் வேண்டினார். சந்திராங்கதன் அதற்குடன்பட்டுச் சேனாதிபதிகளை யேவிப்

பத்திராயுவை அவன் தாயோடும், பதுமாகரனோடும், சுனதனோடும், பரிசனர்களோடும், இட்டுவரச்செய்து சுபமுகூர்த்தத்திலே அவனுக்குத் தனது புதல்வியாகிய கீர்த்திமாலினியை விவாகஞ் செய்துகொடுத்தான். பத்திராயுவும் கீர்த்திமாலினியும், திருமாலையும் திருமகளையும் போல இன்பக்கடலுள் மூழ்கினார்கள். சந்திராங்கதன், பின்பு வச்சிரவாகுவை அடைவிக்கக் கருதி ஒரு பாசுரத்தை எழுதித் தூதர்களிடத்தே கொடுத்து, "இதனைத் தசானன தேசத் தரசனாகிய வச்சிரவாகுவிடம் கொடுக்கக்கடவீர்கள்" என்றான். தூதர்கள், அவன் கட்டளையிட்டவாறு தசானன நகரத்தை யடைந்து வச்சிரவாகுவினிடம் சந்திராங்கதன் எழுதிய பாசுரத்தைக் கொடுத்தார்கள். வச்சிரவாகுவின் குறிப்புணர்ந்து ஒருவன் அதனை வாங்கி, "அரசனே, நின்னைக் காணும் ஆசை மிகவுடையேன், நிடத தேசத்திற்கு வந்து என்னோடு மனங்களித்தபின் உனது நகரத்தையடைதல் வேண்டும்" என்று அதிலிருந்தவாறு உரைக்கக் கேட்டு, ஒரு தேரிலேறிக் கடல் போலும் படை புடைசூழ நிடத தேசத்தை யடைந்தான்.

வச்சிரவாகு வருகின்ற சமாசாரத்தைச் சந்திராங்கதன் கேள்வியுற்றுத் தன் நகரியை யலங்கரித்து, எதிர்கொண்டழைத்து மாளிகையுட் புகுந்து உபசரித்தான். அப்பொழுது பத்திராயு வந்து வச்சிரவாகுவை வணங்கி வாய்புதைத்து அருகு நிற்ப; வச்சிரவாகு மனங்களித்து அவனை நோக்கி, "வீரரேறே! வருதி!" என்று சொல்லிச் சந்திராங்கதனை நோக்கி, "இவன் எனது பகைஞனாகிய ஏமரதனை வென்று என்னைக் காத்து உயிரை அளித்த உரவோன்" என்று சொல்லி, "இவனைப் பெற்றோன் யாவன்! இவன் நாடு யாது! மரபு யாது! எனக்கு உதவி செய்யவந்த காரணம் யாது! உனக்கு மருகனாகிய இவனது வரலாற்றை உரைப்பாயாக" என்று வினவினான். சந்திராங்கதன், அதனைக்கேட்டு, "அரசனே, ஒரு தேசத்தரசன் தன் மனைவியையும், பாலனையும் பழிக்கஞ்சாமல் அகற்றிவிட, வணிகனொருவன் அவர்களைக் காக்குநாளிலே அப் பாலகன் இறந்துவிட்டான். அப்பொழுது ஒரு முனிவர் தோன்றி அவனை உயிர்பெற்றெழச் செய்து அரசியலை உபதேசித்து வெற்றிச்சங்கையும் வாளையுங் கொடுத்துச் சென்றார். பின்பு, அப் புதல்வன் யௌவன பருவத்தை யடைந்து விளங்

கும் காலத்திலே, தனது தந்தையைப் பகைவர்கள் போரில் வென்று தளையிட்டுச் செல்லுதலைக் கேள்வியுற்றுச் சென்று அவர்களோடு போர்புரிந்து தந்தையைச் சிறை நீக்கினான். இக் கதையைப்போலவொரு கதை முன் கேட்டதுண்டே லுரைப்பாயாக. இவனே அக் குமாரன். இவன் தாதையு நீயே யாவை. இங்கே நிற்கும் இவளும் உனது பத்தினியாவள்" என்றான். வச்சிரவாகு அதனைக் கேட்டு மதிமயங்கி நிலத்தில் வீழ்ந்து "அந்தோ, அந்தோ; நீசர் தொழிலை மேற்கொண்டு அறநெறி கருதாது உங்களை முன் கானகத்திலே விடுத்த தமியேன் இறப்பதே தருமம்" என்று சொல்லி எழுந்தான். அப்பொழுது சந்திராங்கதன் அவனைத் தேற்ற அவன் ஒருவாறு மனந்தேறிச் சிலகாலம் அங்கே மகிழ்வுடன் வசித்துப் பின்பு தன் மனைவியாகிய சுமதியோடும், பத்திராயுவோடும், கீர்த்தி மாலினியோடும், தேரிலேறித் தசானன நகரத்தையடைந்து, "ஏமாதனை இனித் திறையளப்பாயாக" வென்று சொல்லி அவனைச் செல்லவிட்டு வாழ்ந்தான்.

அநேக காலம் சென்ற பின் வச்சிரவாகு வானுலகை யடைய, அவன் புதல்வனாகிய பத்திராயுசெங்கோல் செலுத்துவா னாயினான். ஒரு நாள் அவன் பொழிலாட்டயரத் தன் துணைவி யோடு சண்பகம், பலா, கமுகு, சந்தனம், தேமா, கோங்கு, மந்தாரை, பாதிரி முதலிய மரங்கள் நெருங்கி நறுமணம் பரப்பி, வண்டும் கிளியும் ஒலிக்கும் ஒரு வனத்தை யடைந்து மனங் களித்து இளைப்பு நீங்கி இருக்கும்பொழுது, ஒரு வேதியன் புலி யொன்று தொடர்ந்து கொல்லவரும் மனைவியோடு அவனிடத்து, வந்து, "வேந்தனே; எனது மனைவியைப் புலியினின்றும் காப்பாயாக" என்று முறையிட்டான். பத்திராயு அதனைக் கேட்டு வில்லை வளைத்து ஒரு பாணத்தைப் புலியின்மீது ஏவ; அது அப்புலியின் மேல் மலர்போல் வீழ்ந்தது. வேதியனது பத்தினி அஞ்சி "அரசனே எனது உயிர் உனக்கே அடைக் கலம்" என்றரற்றப்; புலி அவளையுண்டது. பத்திராயு துய ரங் கொண்டு திகைத்தான். புலி அப்பாற் சென்றது.

வேதியன், மனைவியை இழந்தமையினாற் துயரங்கொண்டு புலம்பிப் பத்திராயுவை நோக்கி, "செங்கோல் வேந்தே! உனக் குப் பன்னீராயிரம் யானைப் பெலனுண்டென்று பூமியிலுள்ளார்

சொல்வர். அப் பெலன் இப்பொழுது எங்கே தொலைந்தது. பெண்ணாகி அந்தணர் பேதையுமாய் நின்று உனக்கு அபயம் பேசிய ஒருத்தியை வேங்கைக்கு உணவாகக் கொடுத்து உயிரைக் காத்து நின்றாய்" என்றிழித்துரைத்தான். பத்திராயு மனம் நொந்து அவனை வணங்க, அவன், பத்திராயுவை மறுமுறையும் பார்த்து, "அரசனே, வேதியர்களுக்குப் பத்தினியரில்லாதொழியின் வேதவிதிப்படி ஒழுகுதல் கூடாது. ஆதலால் உனது மனைவியாகிய கீர்த்திமாலினியை எனக்குத் தரல் வேண்டும். மறுத்தியேல் உன்னை எரிவாய் நரகத்துள் வீழுமாறு சபிப்பேன்" என்றான். பத்திராயு அவன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டுக் கவலைக்கடலுள் மூழ்கி ஒருவாறு தேறித் தனது மனைவியாகிய கீர்த்திமாலினியைப் போற்றித், "தாயே, இவ் வேதியருடன் செல்லுதி," என்று சொல்லி, "இனி யான் இவ் வுயிரைச் சுமப்பின் பழியேயாகும்" என்று துணிந்து ஒரு சாரிலே அக்கினியமைத்துச் சிவபெருமானைத் தியானம்புரிந்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு அவ் அக்கினியில் வீழ்ந்திறக்குமாறு பிரதக்ஷிணம் செய்தான்.

அப்பொழுது, கருணாசமுத்திரமாகிய சிவபெருமான், உமாதேவியார் வாமபாகத்தில் மேவ இடபவாகனரூட்ராய்த் தேவர்களும் கணநாதர்களும் பக்கத்திலே சூழ, அவனுடைய ஊனக் கண்களுக்குத் தோன்றியருள, பத்திராயு அமிர்தமுண்டவன் போற் களித்து, "எனது பிறவிப்பகை இன்றே யொழிந்தது" என்று கருதி அவரது திருவடிகளின் முன் வீழ்ந்து நமஸ்கரித்துத் தன்வயமழிந்து சரீரம் நடுங்க, மயிர் சிலிர்க்க, உரை தடுமாற எம்பெருமானைத் துதித்தான். சிவபெருமான் அவனைத் திருக்கையால், "எழுதி" என்று சொல்லி எடுத்துக் கிருபா நோக்கஞ் செய்து, "அன்பனே, நாமே வேதியனாகவும் எமது தேவியே வேதியன் மனைவியாகவும், மாயையே புலியாகவும் வந்தேம். நீ வேண்டிய வரங்களைக் கேட்பாயாக" என்றருளிச் செய்தார். பத்திராயு மனங்களித்து, "அடியேனும், கீர்த்திமாலினியும், அடியேனைக் காத்த பதுமாகரன் என்னும் வணிகனும், அவன் புதல்வனாகிய சுனதனும் தேவரீருடைய திருவடிகளை அடைய வரமீந்தருளுதல் வேண்டும் என்றான். கீர்த்திமாலினியும் அப்பொழுது சிவபெருமானை வணங்கி, "அடியேனும்

அடியேனை யீன்ற சந்திராங்கதனும், சீமந்தனியும் தேவரீருடைய பதத்தையடைய வரமீந்தருளுதல் வேண்டும்" என்று துதித்தாள். சிவபெருமான் "அவ்வாறாகுக" என்று அவர்களுக்கு வரமீந்து மறைந்தருளினார்.

பின்பு, பத்திராயு தன் நகரத்தை யடைந்து பதினாயிரம் வருஷம் அரசுபுரிந்து புதல்வனொருவனுக்கு முடிசூட்டிச் சிவபதத்தை யடைந்தான். அங்ஙனமே கீர்த்திமாலினியும், பதுமாகரனும், சந்திராங்கதனும் சீமந்தனியும், சுனதனும் சிவபெருமானுடைய வரப்பிரசாதத்தினாற் சிவபதத்தை யடைந்தார்கள்" என்று சூதமுனிவர் நைமிசாரணியத்து முனிவர்களுக்குச் சிவனடியார்களது மகிமையைச் சொல்லி; விபூதி மகிமையைப் பின்வருமாறு சொல்லுவாராயினர்.

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது

விபூதி மகிமைச் சருக்கம்

முற்காலத்திலே, வாமதேவர் என்னும் முனிவர், நற்குணமுடையராயும், சடாமுடியையுடையராயும், மரவுரிதரித்தவராயும், விபூதி தரித்த மேனியை யுடையவராய்க் கரத்திலே கபாலத்தைத் தரித்துத், தேசயாத்திரை செய்பொழுது, கிரௌஞ்சவனத்திற் சென்றார். அப்பொழுது; கரிய உடலும், அக்கினிச் சுடர் போலும் செங்குஞ்சியும், மலைமுழைஞ்சு போன்ற பெருவாயும், கடற்றிரை போல நெளிந்த புருவமும் உடைய அரக்கனொருவன் வெண்பிறை போன்ற வக்கிரதந்தங்களால் புலால் மணம் வீசும்படி அதரங்களை மென்று, மென்று இடிபோல நகைத்து அவரை யடைந்து, உண்ணுமாறு கருதி இரண்டு கைகளாலும் இறுகுமாறு பிடித்தான். வாமதேவமுனிவரது மேனியிற் பூசிய விபூதி அவ் வரக்கனது உடலிற் பட்டது. அரக்கன் அதன் மகிமையினாலே பொன்போலும் மேனியை

யடைந்து முன்னுள்ள தாகமும் பசியும் , தீக்குணமும் பாவங்களும் நீங்கித் தேவ வடிவத்தையுடையவனாய் வாமதேவ முனிவரை நமஸ்கரித்துச், "சுவாமீ, தேவரீரது திருமேனியை அடியேன் பரிசித்தமையினால் பாவங்கள் நீங்கி உய்ந்தேன். பரகதியடையுமாறு அருள் புரிதல் வேண்டும்" என்றான். வாமதேவ முனிவர் அவனை நோக்கி, "நீ எவன்? இவ்வுரு எடுக்க என்ன பாவம் செய்தனை?" என்றார்.

அரக்கன், மனம் மகிழ்ந்து, "இருபத்தைந்து பிறவிகளுக்கு முன் அடியேன் மிலேச்ச நாட்டிலே துச்சயன் என்னும் அரசனாகப் பிறந்து கொடுங்கோல் செய்து பிராமண வருணத்துட் பிறந்த கன்னியர் தொடங்கிப் புலைப் பெண்கள் வரையிலுள்ள பெண்கள் பலரையும் ஒவ்வொரு நாளின் மாத்திரை புணர்ந்து பின் அவர்களைச் சிறையிட்டேன். அப் பாவத்தினால் நான் இறந்தபின் முப்பதினாயிரம் வருஷம் நரகத்தே வீழ்ந்து வருந்திப் பின், கரடி, புலி, பாம்பு, முதலிய விலங்குகளாய் இருபத்து மூன்று பிறவிகளை எடுத்துழன்று இப்பிறவியில் அரக்கனானேன். தேவரீருடைய மேனியை இப்பொழுது பரிசித்தமையினால் தேவவடிவத்தை யடைந்தேன். இதற்குக் காரணம் யாதோ அறியேன்" என்றான்.

வாமதேவமுனிவர், அவனை நோக்கி, "நீ எனது சரீரத்தைக் கட்டித் தழுவியபொழுது என்மேற் பூசிய விபூதி உனது உடலிலே படிதலாற் பாவம் நீங்கி இத் தேவ வடிவத்தை யடைந்து, முற்பிறவியை யடைந்தாய். விபூதியின் பெருமை பிரம விஷ்ணுக்களாலும் துணியப்படாத தென்றால், மனிதரோ அதனை அறிய வல்லுநர். முற்காலத்திலே பாண்டிய நாட்டில் வாழ்ந்த ஓரந்தணன், பிறப்பொழுக்கங் குன்றிக், கொலை, களவு, கள்ளுண்ணல், மாமிசம் புசித்தல் என்னும் பாவங்களைச் செய்ததன்றியும் காமநோய்கொண்டு, கணிகையரையும், பிறர் மனைவியரையும், கன்னியரையும் மயக்கிப் புணர்ந்துதிரியும் நாளில், ஒரு நாள் புலையனொருவனது வீட்டிற் புகுந்து அவனது மனைவியைக் களவிற் புணர்ந்தான். புலையன் அப்பொழுது அச்செயலைக் கண்டு வெகுண்டு வாளை உறைநீக்கி அவனை வெட்டி இறந்தபின் சேரிநீற்றி லெறியக் காலதூதர்கள் அவனது உயிரைப் பற்றிக்கொண்டு போகும்பொழுது

சிவகணங்கள் வந்து அவர்களைத் தண்டித்து அவனைச் சிவபதத்தி லடைவித்தார்கள்" என்றருளிச்செய்தார்.

அரக்கனாயிருந்த அரசன் அவரை மீட்டும் நமஸ்கரித்து, "அடியேன் மிலேச்ச நாட்டிலே அரசியல் நடத்தும்பொழுது விளைநிலம் ஒன்றை, ஒரு வேதியனுக்குத் தானம் செய்தமையால், யமன் தேவரீரைத் தரிசித்துப் பாவம் நீங்கித் தேவ வடிவத்தை யுடைவாய் என்று சொன்னான். தேவரீர் இப்பொழுது விபூதியின் மான்மியத்தை உபதேசித்தருளுதல் வேண்டும்" என்று துதிக்க வாமதேவ முனிவர் சொல்லுவாராயினர்.

மந்தரமலையிலேயுள்ள அத்தாணி மண்டபத்திலே உமாதேவியார் வாமபாகத்திலே மேவ, உருத்திரர்களும், அரிபிரமேந்திராதி தேவர்களும், சிவகணநாதர்களும், முனிவர்களும் வணங்கித் துதிக்க, ஊர்வசி முதலிய நடனப் பெண்கள் நடிக்கச் சிவபெருமான் திவ்விய சிங்காசனத்திலே வீற்றிருக்கும்பொழுது, ஒருநாள் பிரமதேவரது மனத்தினின்றும் ஞானத்தோடு அவதரித்த சனற்குமார முனிவர் அவரைத் துதித்து வணங்கி, "சுவாமீ, முன்பு ஞானநூல் முற்றும் உபதேசித்தருளினீர். இப்பொழுது மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கு எளிதில் அனுஷ்டிக்கவுரிய ஒரு சிவதருமத்தை உபதேசிக்க வேண்டும்" என்று வினவச்; சிவபெருமான் "விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்தலே மேலாகிய சிவதருமம்" என்றருளிச் செய்தார். சனற்குமாரமுனிவர் மகிழ்ச்சியடைந்து, "தேவரீர் விபூதியின் இயல்பையும், திரிபுண்டரமுண்டாகும் வழியையும் அதனைத் தரிக்கும் இடங்களையும், அதற்குரிய மந்திரத்தையும், காலத்தையும், அளவையையும் அருளிச் செய்ய வேண்டும்" என்று வினவச் சிவபெருமான் பின்வருமாறு அருளிச்செய்வாராயினர்.

"பசுவின் சாணத்தை அக்கினியிலே தகித்தலால் உண்டாவது விபூதி என்று சொல்லப்படும். இதனை நீரிலே குழைத்துச் சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினறிடங்களினும், நடுவிரல் மூன்றினும் பஞ்சப்பிரம மந்திரங்களையேனும் வேத மந்திரங்களையேனும் உச்சரித்துத்

தரிப்பது திரிபுண்டரமாகும். இப்படித் தரிக்கும்பொழுது நெற்றியில் இரண்டு கடைப்புருவவெல்லை நீளமும் மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குல நீளமும், மற்றைத் தானங்களில் ஒவ்வோராங்குல நீளமும் பொருந்தத் தரித்தல் வேண்டும். திரிபுண்டரங்களுக்கு இடைநீக்கம் ஒவ்வொரு விரல் இருத்தல் வேண்டும். உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்பவர்கள் இத் திரிபுண்டரத்தின் அதிதேவர்களாவார்கள். இப்படித் திரிபுண்டரமாக விபூதியைத் தரிப்பதினும் இலகுவான வழி முத்தியின் பொருட்டுப் பிறிதில்லை. இவ்வாறன்றி விபூதியை உத்தூளனமாகவுந் தரிக்கலாம். நல்லொழுக்கமுடையவர்களேனும், அஃதில்லாதவர்களேனும், விபூதியைத் தரிப்பவர்கள் புத்தியையும், முத்தியையும் பெறுவார்கள்" என்று சிவபெருமான் அருளிச்செய்தது கேட்டுச் சனற்குமார முனிவர் மீட்டும் அவரை வணங்கிக்கொண்டு விடைபெற்றுச் சத்தியலோகத்தை யடைந்தார்.

இங்ஙனம் வாமதேவ முனிவர் விபூதியின் மான்மியத்தை அரக்கனாயிருந்த அரசனுக்கு உணர்த்தி விபூதியை அள்ளி அவனுக்குக் கொடுத்து அது தரித்தற்குரிய மந்திரத்தை உபதேசித்து "நீ சுவர்க்க லோகத்தின் போகங்களைத் துய்த்தபின்பு சிவபதத்தை யடைவாயாக" என்றருளிச்செய்துவிட்டுச் சென்றனர். அரக்கனாயிருந்த அரசனும் சுவர்க்க லோகத்தை யடைந்தான். என்றிவ்வாறு சூதமுனிவர் நைமிசாரணியத்து முனிவர்களுக்கு விபூதி மான்மியத்தைச் சொல்லிச் சிவபூசை மான்மியத்தைப் பின்வருமாறு அருளிச்செய்வாராயினார்.

திருச்சிற்றம்பலம்

ஆறாவது
சிவபூசைச் சருக்கம்

பாஞ்சால நாட்டிலே, சிங்ககேது என்னும் அரசன், செங்கோல் நடத்துங் காலத்திலே ஒருநாள், அவன் வேட்டையாட விருப்பங்கொண்டு, சேனைகளும், வலையும் வாரும் தடியிலே காவுபவர்களும், துடியும் இரலையும் குறிஞ்சிப்பறையும் ஒலிப்பவர்களும், நாயைப் பற்றி வருபவர்களும் புடைசூழ்ந்துவரக் காட்டையடைந்து வேட்டையாடும்பொழுது, சண்டன் என்னும் பெயரையுடைய வேடன் இடிந்தழிந்த சிவாலயத்துட் கிடந்த சிவலிங்கம் ஒன்றைக் கண்டு பேரன்பினோடும் எடுத்துக்கொண்டுபோய், அவ்வரசனுக்குக் காட்டி, "இந்தச் சிவலிங்கத்தை வழிபடுந் திறத்தை உரைத்தல் வேண்டும்" என்று வணங்கினான். சிங்ககேது அதனைக் கேட்டுக் கைபுடைத்துச் சிரித்து அசதியினாலே, "நீ இச் சிவலிங்கத்தை அபிஷேகஞ் செய்து தூபதீபங்கொடுத்துச் சுடலைச் சாம்பரைக் கொணர்ந்து முன்வைத்துப் போற்றிக் கூத்தாடிப் பாடி வழிபடுவாயாக" என்றான்.

வேடன், அவன் கூறியதைக் கடைப்பிடித்து அநுதினமும் வழிபட்டுவருங் காலத்திலே, ஒருநாள் மனிதரைச் சுட்ட சாம்பல் கிடையாது மனம்வருந்த; அவனது மனைவி, "என்னை இக்குடிலினுள்ளே தகித்து அச் சாம்பரை எடுத்துப் பூசை செய்வீராக" என்றாள். வேடன் அதற்கு மறுத்துக் கூற, அவன் மனைவி சிவபூசையில் வைத்த ஆர்வத்தினாலே பின்னும் அவனை அவ்வாறு செய்யும்படி வேண்டினாள். வேடன் ஒருவாறு உடன்பட அவனது மனைவி, நீராடிக் கலன்களைப் பூண்டு மாலையைச் சூடி வெண்பட்டுடுத்துக் குடிலிலே அக்கினியிட்டு, அதிற் பிரவேசித்தாள். வேடன் மகிழ்ந்து அவளது சாம்பரை எடுத்துப் பூசை செய்தான். முடிவிலே, அவனது மனைவி பூசைச் சேடம் வாங்கும்பொருட்டு வந்து நிற்க, வேடன் ஆச்சரியமுற்று, "அக்கினியிலே வீழ்ந்திறந்த நீ வந்தவாறு யாது" என்று வினவ; அவள் "யான் அக்கினியில் வீழ்ந்து துயில் கொண்டவர்களைப்போல் மீண்டுவந்தேன்" என்றாள்.

அப்பொழுது, சிவகணங்கள் தேவவிமானம் ஒன்றை ஆகாய மார்க்கமாகக் கொண்டுவந்து அவ்வேடனையும் அவன் மனைவியை யும் சிவலோகத்தை யடைவித்தார்கள் என்று சூதமுனிவர் நைமிசாரணியத்துமுனிவர்களுக்குச் சிவபூசை மான்மியத்தைச் சொல்லி உமாமகேசுவர விரத மான்மியத்தைப் பின்வருமாறு அருளிச்செய்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்

ஏழாவது

உமாமகேசுர விரதச் சருக்கம்

ஆனந்த நாட்டிலே வாழ்ந்த வேதவிரதன் என்னும் அந்தணன், சாரதை என்னும் புதல்வியைப் பெற்றுவளர்க்கும் நாளிலே, அவளுக்குப் பன்னிராண்டுப் பருவம் வந்தபொழுது, அந்நாட்டின் அரசனது தோழனாகிய பத்மநாபன் என்னும் முதியோன் செல்வ மிகுதியினாலே களித்து அவளை மணம்புரிய விரும்பிச் சிலரை வேதவிரதனிடத்து, "மணம்பேசி வருதிர்" என்று ஏவினான். வேதவிரதன் பத்மநாபனது முதுமையை எண்ணி மறுத்தும், பின்பு அவனது தோழனாகிய அரசனது கொடுங்கோன்மையை அஞ்சி ஒருவாறுடன்பட்டுப் பத்மநாப னுக்குத் தனது மகளாகிய சாரதையை ஒரு சுபதினத்திலே வேதவிதிப்படி விவாகஞ் செய்துகொடுத்தான். பத்மநாபன், அன்று சாயங்காலம் ஒரு தடாகத்தை யடைந்து சந்தியாவந்த னஞ் செய்து திரும்பிவருகையிற் சர்ப்பமொன்று தீண்ட அதனு லுயிர் நீங்கினான். அவனது ஈமக்கடன் கழிந்தபின் சாரதை தாபத நிலையளாகித் துக்கத்தோடு பொழுதுபோக்கினாள்.

இப்படிச் சிலகாலஞ் சென்ற பின்பு, நைத்துருவமுனிவர் அவளது மனையை யடையத், தனியே யிருந்த அவள் எதிர் சென்று முகமன் கூறி அழைத்துவந்து பூசைபுரிந்து, அன்ன மிட்டுத் துதித்தாள். குருடாகிய நைத்துருவமுனிவர், உண்ட பின் மகிழ்ந்து, அவளை நோக்கி, " நீ, இந்திரனையும் இந்திராணி

யையும் போல உன் கணவனோடு இன்பமனுபவித்து ஒரு சற்புத்திரனைப் பெற்று வாழ்வாயாக" என்று ஆசீர்வதித்தார். சாரதை, அதுகேட்டு ஆச்சரியமுற்றுச், "சுவாமீ, நாயகனை இழந்து விதவையாயிருக்கும் அடிச்சியைத் தேவரீர் ஆசீர்வதித்தது பயனற்றதாய் ஒழிந்ததே!" என்று கூற; நைத்துவ முனிவர் அவளைத் தேற்றி, "நீ, சித்திரை மாதத்திலாதல் மார்கழி மாதத்திலாதல் பூர்வபக்ஷத்திலே ஒரு சுபதினந் தொடங்கி, அஷ்டமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை என்னுந் திதிகடோறும் விரதமனுஷ்டித்து மண்டபமமைத்து, அங்கே சிவபெருமானையும் உமையம்மையையும் பூசைபுரிந்து உத்தியாபனம் முடிந்த பின்பு ஒரு வேதியனையும் அவனது மனைவியையும் வரித்துச் சிவபெருமானாகவும் உமாதேவியாகவும் வழிபட்டு அவர்களுக் கமுதளித்து இயற்றப்படும் உமாமகேசுர விரதத்தை நோற்பாயாக" என்றார். அப்பொழுது வேதவிரதனும் அவன் மனைவியும் வந்து நைத்துவமுனிவரைக் கண்டு வணங்கி நிகழ்ந்தவற்றைக் கேட்டு மகிழ்ந்து அவரை நோக்கி, "தேவரீரே சாரதையை இவ் விரதத்தை ஆசிரியராகவிருந்து அனுஷ்டிப்பித்தல் வேண்டும்" என்றார்கள். நைத்துவமுனிவர், உடன்பட்டு அவர்களது மனையிலே பன்னிரண்டு மாதம் வரையுமிருந்து அச் சாரதையைக் கொண்டு அவ் வுமாமகேசுர விரதத்தை அனுஷ்டிக்குமாறு செய்தார்.

பன்னிரண்டு மாதமும் கழிந்த பின்பு, ஒரு நாள் உமாமகேசுர விரதத்தை அனுஷ்டித்துச் சாரதையும் நைத்துவமுனிவரும் சாயங்காலம் உமாதேவியாரைத் தோத்திரஞ் செய்யும் பொழுது, அவ்வுமாதேவியார் அவர்களுக்கு முன்னே தோன்றி, "அன்பர்களே, உங்கள் விரதத்தின் பொருட்டு மகிழ்ந்தேம; விரும்பிய வரங்களைக் கேளுங்கள்" என்று அருளிச் செய்தார். அப்பொழுது, நைத்துவமுனிவர் குருடு நீங்கி அவரைத் தெரிசித்து வணங்கி, "அன்னையே, அடியேன் கண் தெரியாமையினாலே இச் சாரதை என்னை வணங்கும்பொழுது, 'நாயகனோடு நல்வாழ்வெய்துக' என்று ஆசீர்வதித்தேன். அவ்வாசீர்வாதப் பயன் குன்றாமல் அருள்புரிதல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். உமாதேவியார் அதனைத் திருச்செவி சாத்தி, "நைத்துவனே, இவள் முற்சனனத்திலே பாண்டி

நாட்டிலே பதுமினி என்னும் பெயருடையளாகப் பிறந்து, தனது நாயகனை மணம் புரிந்த ஒரு பெண்ணை அவனோடு புணர வொட்டாது தடுத்த பாவத்தினாலே இப் பிறப்பிலே இளமையிலேயே கைம்மையாயினள். இப் பிறப்பில் இவளை மணஞ் செய்து இறந்தவன் இவளுக்கு நாயகனல்லன். அவன் முற் பிறப்பில் இவளைப் புணர விரும்பிய வேறொருவன். இவளது நாயகன் பாண்டியநாட்டிலே பிராமண குலத்திலே பிறந்து வாழ்கின்றான். அவனும் இவளும் சொப்பனத்திற் புணர்ந்து மகிழ்ந்து ஒரு புதல்வனைப் பெற்றுப் பின்பு நனவிலும் சேர்ந்து வாழ்வெய்துவர்" என்று வரங்கொடுத்து மறைந்தருளினார். நைத்துருவமுனிவர், அடுத்த நாள், சாரதையின் தந்தையாகிய வேதவிரதனுக்கும் அவன் மனைவிக்கும் நிகழ்ந்த வரலாற்றைக் கூறித் தமதாச்சிரமத்தை யடைந்தார்.

பின்பு சொப்பனத்திலே சாரதையும் பாண்டியநாட்டிற் பிறந்த அவளது நாயகனும் இன்பமனுபவிக்குங் காலத்திலே, சாரதை கருப்பவதியாகச் சுற்றத்தார் அதிசயங்கொண்டு அவளை அலர் கூறி, ஒரு சபையிலே விசாரித்து, "இவளை மூக்கையும் காதையும் கொய்து இவ்வூரை விட்டு ஓட்டிவிடுவோம்" என்று சொல்லி வருத்தும்பொழுது, ஆகாயத்திலே ஒரு தெய்வம், "இவளைக் கணிகை என்று சொல்லுபவர்களுடைய நா அற்று விழுக" என்று விளம்பியது. அதனைக் கேட்டுச் சுற்றத்தினர் முன்னிகழ்ந்த வரலாற்றைக் கேட்டு அதிசயித்தனர். சாரதை ஒரு புதல்வனைப் பெற்று அவனுக்குச் சாரதேயன் என்று நாமமிட்டு வேதாத்தியயனஞ் செய்வித்தாள். ஒரு சிவராத்திரி காலத்திலே அவளும் சுற்றத்தினரும் திருக்கோகன்னத்துக்குப் போக, அங்கே பாண்டிய நாட்டிலவதரித்த அவளது நாயகனும் வந்து, சாரதையையும் அவளது புதல்வனையும் கண்டு தெளிந்து தனது சுற்றத்தார் பொருந்த அவர்களைப் பாண்டிய நாட்டிற் கழைத்துச் சென்று நெடுங்காலம் வாழ்ந்திறந்தான். சாரதையும் அக்கினிப் பிரவேசமாய் அவனோடு தேவவிமானத்திலே ஏறிச் சுவர்க்கலோகத்தை யடைந்தாள். என்று சூத முனிவர் நைமிசாரணியத்து முனிவர்களுக்கு உமாமகேசுர விரதமான்மியத்தைச் சொல்லி, உருத்திராக்ஷமான்மியத்தைப் பின்வருமாறு அருளிச் செய்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்

எட்டாவது

உருத்திராக்ஷமான்மியச் சருக்கம்

தேவர்கள், திரிபுரத்தசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்துகொண்டபொழுது, திருக் கைலாசபதியுடைய மூன்று திருக்கண்களினின்றும் பொழிந்த நீரிற்றோன்றிய மணி உருத்திராக்ஷம் என்று சொல்லப்படும். இதில் ஒரு முகமணி முதற் பதினாறு முகமணி வரை உண்டு. இதனைப் பொன்னாயினும் வெள்ளியாயினும் தாமிரமாயினும் முத்தாயினும் பவளமாயினும் பளிங்காயினும், இடையிடையே இட்டு, முகத்தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்தக் கோத்துத் தரித்தல் வேண்டும். குடுமியிலும் பூணூலினும் காதுகளினும் ஒவ்வொரு மணியும் கழுத்திலே முப்பத்திரண்டு மணியும், புயங்களிலே தனித்தனி பதினாறு மணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நாற்பெட்டுமணியு மாக இவ்வுருத்திராக்ஷந் தரிக்கப்படும். இதனைத் தரித்துக் கொண்டு ஸ்நானஞ் செய்பவர்கள் கங்கையிற் றீர்த்தமாடிய பலனையடைவார்கள். உருத்திராக்ஷத்திலே சிவபூசை செய்பவர் களும் அதனை அணிபவர்களும் பாவத்தை யறுத்துச் சாலோக பதத்தை யடைவார்கள். இவ் வுருத்திராக்ஷ மணியினாலே நிகழ்ந்த சரித்திரமொன்று பின்வருமாறாகும்.

காசிமீர நாட்டரசனாகிய பத்திரசேனன் என்பவனீன்ற தருமவருமன் என்பவனும், அவ்வரசனது மந்திரி யீன்ற தாருகன் என்பவனும் வேதங்களையும், இராஜநீதியையும், தனுர் வேதத்தையும் கற்றுக் கருணையுந் தயவும் மாண்பும் உடையவர் களாய்த் தருமஞ் செய்யவேண்டும் என்னும் அவாவோடு வளர்ந் தார்கள். அவர்கள் ஹாரகேயூரகடககங்கண முதலிய மாற்றறி யாத செழும்பசும்பொன்னாலும் இரத்தினங்களாலும் முத்துக் களாலும் இயன்ற ஆபரணங்களை வெறுத்துத் தரியாது விபூதியி லும் உருத்திராக்ஷத்திலும் பேரன்புடையவர்களாய் அவற்றைத் தரிப்பாராயினர். ஒரு நாட் பராசரமுனிவர் பத்திரசேனனது மாளிகைக்கு வர; அவன் அவரை எதிர்சென்றழைத்து வந்து பாத்தியார்க்கியாசமனீயங் கொடுத்துப் பொற்பீடத்திலிருத்தி

வணங்கி, "சுவாமீ, எனது மைந்தனாகிய தருமவருமனும் அவனது தோழனாகிய தாருகனும் இரத்தினங்க ளழுத்திச் செய்த பொன்னாபரணங்களை இகழ்ந்து விபூதி ருத்திராக்ஷங்களைத் தரிக்கின்றார்கள். இதற்குக் காரணம் யாதோ! அறியேன்" என்றான். பராசரமுனிவர் அதனைக்கேட்டுக் கூறுவாராயினார்: "அரசனே, முற்காலத்திலே, நந்திக்கிராமத்திலே வாழ்ந்த மானங்கை என்னும் பொதுமகள் அரங்கிலே ஒரு குரங்கையும் கோழியொன்றையும் தறியிலே பிணித்து உருத்திராக்ஷ மாலையை அவற்றிற்குத் தரித்து அவை ஒன்றோடொன்று பழகி நடித்தலைக்கண்டு, முகம் வியர்ப்ப நகைத்து விளையாடி மகிழ்வாள். இங்ஙனம், இவள் வாழுங் காலத்திலே, ஒரு வைசியன், விபூதி ருத்திராக்ஷந் தரித்து, கையிலே இரத்தின கடகமொன்றை ஏந்தி, அவளது மாளிகையை அடைய; மானங்கை அவனை இருக்கச் செய்து உபசரித்து, "பொதுமகளாகிய எனது கையிலே உம்மிடம் இருக்கும் இரத்தின கடகத்தை இட்டால் மூன்று தினம் உம்மைப் புணருவேன்" என்றாள். வைசியன், "அப்படியாயிற் கற்புடைய பெண்கள் போல அம் மூன்று தினமும் இருப்பேன் என்று ஆணையிடுவாயாக" என்றான். மானங்கை, "இந்திரன் வரினும் வெறுப்பேனாக" என்று ஆணையிட்டாள். வைசியன் இரததின கடகததை அவளது கையிலே இட்டு, அவளிடத்திலே ஒரு மாணிக்க லிங்கத்தைக் கொடுத்து, "இதை நான் போகும்போது தருவாயாக" என்று சொல்ல; மானங்கை, "அப்படியேயாகுக" என்று சொல்லி, அதனை வாங்கி நாடக அரங்கிலே வைததுப் பின்பு, அன்றிரவு, மன்மதனை விரும்பிய இரதிபோலப் புணர்ந்து துயில்கொண்டாள். அர்த்தசாமத்திலே அந்நாடகவரங்கை அக்கினி கதுவி எரிக்க, வைசியனும் மானங்கையும் துண்ணென விழித்து, அஞ்சி ஓடிப்போயினார்கள். மானங்கை திரும்பிவந்து தான் வளர்த்த குரங்கையும் கோழியையும் பிணி நெகிழ்த்துவிட்டாள். வைசியன் கொடுத்த மாணிக்கலிங்கம் வெந்து நீறாகியது. அப்பொழுது அவ் வைசியன் மானங்கையை நோக்கி, "நான் தந்த சிவலிங்கம் எரிந்தபடியால் இறந்துவிடுவேன். ஆதலால் இப்பொழுது அக்கினி வளர்ப்பாயாக" என்றான். மானங்கை அக்கினி வளர்ப்பிக்க, வைசியன் அதிலே வீழ்ந்திறந்தான். மானங்கை அதனைக் கண்டிரங்கி, "மூன்று நாள் வரையும் கற்

புடையளாய் ஒழுகுமாறு ஆணையிட்ட நான் இறத்தலே தக்கது!" என்று துணிந்து அவ்வக்கினியை வலம் வந்து விழும்போது, சிவபெருமான் உமாதேவியார் வாமபாகத்திலே மேவ இடபாரூடராய்த் தோன்றி, "மானங்கையே, உனது சத்தியத்தை அறியும் பொருட்டு யாமே வைசியனாக வந்தேம்; அஞ்சாதே; அக்கினியில் வீழ்தலொழிந்து எமது பதத்தை யடைவாயாக" என்றருளிச் செய்து சிவபதத்தைக் கொடுத்தருளினார். அந்த மானங்கை என்னும் பொதுமகள் வளர்த்த குரங்கும் கோழியும் முன்பு ஸ்ரீருத்திராக்ஷம் தரித்த பலத்தினாலே முறையே உனக்கும் உனது மந்திரிக்கும் புதல்வர்களாகப் பிறந்து பூர்வஜன்மவாதனையினாலே விபூதி ருத்திராக்ஷங்களைத் தரிக்கின்றார்கள்.

என்று இவ்வாறு பராசரமுனிவர் கூறக் கேட்ட பத்திரசேனன், "இனி இவர்களுக்கு நிகழ்வது என்னை" என்று வினவப், பராசரமுனிவர் பின்வருமாறு கூறுவாராயினார் என்று கூறிச் சூதமுனிவர் நைமிசாரணியத்து முனிவர்களுக்கு ஸ்ரீ ருத்திரமான்மியத்தை அருளிச்செய்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்

ஒன்பதாவது

ஸ்ரீ ருத்திர மான்மியச் சருக்கம்

பத்திரசேனன் வினவியதைக் கேட்ட பராசரமுனிவர் அவனை நோக்கி, "அரசனே, நீ நெஞ்சங் கலங்கித் துயரம் அடையுமாறு பன்னீராட்டைப் பருவமுடைய உனது புதல்வனாகிய தருமவருமன் இறந்துவிடுவான். அவ்வவமிருத்தியு நீங்கும்படி தைத்திரியாரண்ணியத்தின் நடுமணியாகிய ஸ்ரீ ருத்திரத்தை ஓதுவித்தலும், அதனை ஓதிச் சிவலிங்கப்பெருமானை அபிஷேகஞ் செய்த தீர்த்தத்தைத் தலையின்மேலே தூவுதலும் செய்தல் வேண்டும். ஆதலாற் பத்துத்தினம் வரையும் இதனை ஓதுவிப்பாயாக. முற்காலத்திலே, • பிரமதேவர் வேதங்களை அருளிச் செய்த காலத்தில் உலகத்திலே வசித்தவர்கள் இதனை ஓதலும் கேட்டலும் செய்தமையால் யமராஜனது நரகங்களிலே உயிர்கள் வீழ்தலொழிந்தன. யமன் அதனைக் கண்டு மனம்நொந்து காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் தீமைகளை 'நீங்கள்போய் உயிர்களைப் பிடிப்பீர்களாக' என்று கட்டளையிட்டான். அவை உலகத்தைச் சார்தலும் அங்கேயுள்ளவர்கள் ஸ்ரீ ருத்திரத்தை ஓதலையும் கேட்டலையும் கண்டு அஞ்சித் திரும்பிப்போய் யமராஜனிடம் விண்ணப்பஞ் செய்தன. யமன், அதனைக் கேட்டுச் சத்தியலோகத்தை அடைந்து பிரமதேவரிடம் நிகழ்ந்தவற்றை விண்ணப்பஞ்செய்ய; அவர், அஞ்ஞானத்தின் திறங்களாகிய தருமஞ் செய்தலில் விருப்பின்மை, துன்மதி என்பவைகளைப் 'பூமியிலே சென்று உயிர்களைப் பிடிப்பீர்களாக' என்று ஏவினார். அவை அங்ஙனஞ் சென்று உயிர்களைப் பிடித்தலும் நரகங்கள் குடியேறின. ஸ்ரீ ருத்திரம் உலகத்திலே குன்றியது. யமன் மகிழ்ந்தான்" என்றருளிச்செய்தார். பத்திரசேனன், இதனைக்கேட்டு வேதியர்களைக் கூவிப் பராசரமுனிவர் கும்பஸ்தாபனஞ் செய்து பூசிக்க, அவர்களைக்கொண்டு ஸ்ரீ ருத்திர ஜபஞ் செய்வித்தான்.

இப்படி எழுதினங் கழிதலும், தருமவருமனுக்கு அக்கும்பங்களைப் பராசரமுனிவர் அபிஷேகஞ் செய்தார். அப்பொழுது, அவன் கீழே வீழ்ந்து மயங்கப் பத்திரசேனன் துயரங்கொண்டான். பராசரமுனிவரும் வேதியர்களுந் தருமவருமன்மீது ஸ்ரீ ருத்திரத்தை ஜபஞ் செய்து விபூதியைத் தரித்து, ஆசீர்வதிக்க, அவன் நித்திரைசெய்தவன் உணர்வு பெற்றவாறுபோல எழுந்து தந்தையைநோக்கி, "இளம்பிறை போன்ற பல்லையும் அக்கினிக்கண்ணையும் இடிபோன்ற குரலையுமுடைய ஒரு கரியவன், கையிலே ஒரு கதையையும் கயிற்றையும் ஏந்தி என்னை அடர்க்கும்பொழுது; ஒரு வீரன் அவனை விலக்கி விடுவித்தான். அவ்விருவரும் யாரோ அறியேன்" என்றான். பத்திரசேனன், "எனது குமாரன், காலனார் கயிறு தொட்டீர்க்கும்பொழுது மீண்டான்" என்று மகிழ்ந்து வேதியர்களுக்குச் சுவர்ணதானஞ் செய்து, அவர்களோடு அறுசுவை யுண்டியை யுண்டு அதிசயத்தோடு சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தான். அப்பொழுது, தேன்மாரி துளிப்பதுபோல இனிய கானமாக மகதியாழிலே சிவபெருமானது இணையற்ற புகழைப் பாடுகின்ற நாரத முனிவர் அங்கே வரப், பத்திரசேனன் பாத்தியார்க்கியாசமனீயங் கொடுத்துப் பக்கத்திலே ஒரு ஆசனத்திலிருத்தி வழிபட; அவர், அவனை ஆசீர்வதித்து, "யான் ஆகாயவழியாகச் செல்லுகையில், உனது புதல்வனாகிய தருமவருமனைப் பாசத்தினாலே யமன் பிணித்துக்கொண்டு போகும்பொழுது, வீரபத்திரர் அவனை விலக்கி அவனை மீட்டார். யமன் வீரபத்திரரை வணங்கித் தனது கணக்கனாகிய தருமகுத்தனிடம் தருமவருமனுக்கு வயது ஸ்ரீ ருத்திரபலத்தினாலே பதினாயிரம் வருஷம் என்பதை உணர்ந்து அஞ்சித் தனது நகரத்தை யடைந்தான். இவ்வாறு நிகழ்ந்த சமாசாரத்தை உனக்குச் சொல்லும் பொருட்டு இங்கே வந்தேன்" என்றருளிச்செய்து தமதாச்சிரமத்தை யடைந்தார் என்று சூதமுனிவர் நைமிசாரணியத்து முனிவர்களுக்கு ஸ்ரீருத்திர மான்மியத்தை அருளிச் செய்து, புராண சிரவண மான்மியத்தைப் பின்வருமாறு அருளிச்செய்வாராயினார்.

திருச்சிற்றம்பலம்

பத்தாவது

புராணசிரவணச் சருக்கம்

சிவபுராணங்களாகிய சைவம், பௌடிகம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்பவைகளைக் கேட்டல் தலையாய அறம் என்று ஞானிகள் சொல்லுவார்கள். வேதமோதுதற் கதிகாரிகளாகிய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்பவர்களும்; அவற்றை யோதுதற்கு அதிகாரமில்லாத சூத்திரர், பெண்கள், இழி குலத்தவர் என்பவர்களும் தீர்த்தயாத்திரை, தவஞ்செய்தல், தருமஞ்செய்தல் முதலியவற்றை யொழிப்பினும் சிவபுராணங்களை ஓதலும் கேட்டலும் செய்யின் அவர்கள் இப்பிறவியில் இந்திரனைப்போல இன்பத்தை யனுபவித்து மறுமையிற் சிவகதியை யடைவார்கள். சிவபுராணங்களைப் பொய்யென்றும் அவற்றைப் படனஞ்செய்யும் ஞானிகளை மனிதர்களென்றும் சொல்லுபவர்கள் மூன்று கோடி நரகத்திலே வருந்துவார்கள். அவைகளைத் தீயார் அவையினும், சூதாடுமரங்கத்திலும், உண்டாட்டிடத்திலும், ஓதுதலாகாவாம். சிவபுராணங்களை யோதுபவர்கள் பொருளின் பொருட்டன்றித் தேவாலயங்களினும், நந்தனவனங்களினும் நதிதீரத்திலும் ஞானிகளது சபையினும், யாகஞ்செய்யுமிடத்திலும், மற்றுமுள்ள புண்ணிய ஸ்தானங்களினும் பீடத்திலிருந்து அவைகளை ஓதல் வேண்டும். கேட்பவர்களும் ஸ்நானஞ் செய்து விபூதி யணிந்து நித்திய கருமம் முடித்து ஐம்புலனுங் கருத்தொன்றிப் புல்லறிவினையுடையவர்களைப் புறம்போக்கிப் படனஞ் செய்பவர்களுக்கு இயன்றபொருள்கொடுத்துப் பிறிது வார்த்தை பேசுத லொழிந்து நிலத்திலேயிருந்து கேட்டல் வேண்டும். கேட்கும்பொழுது வேறுபொருள் கற்பிப்பவர்களும், எதிர்வாதிப்பவர்களும், அன்பில்லாதவர்களும், இடையிற் பிறிது கன்மத்திற் செல்லுபவர்களும், ஆசனத்தேனும் மஞ்சத்தேனும் இருப்பவர்களும், வெற்றிலை யுண்பவர்களும், நித்திரை செய்பவர்களும் தவறாது நரகத்தை யடைவார்கள்.

முற்காலத்திலே, பாண்டிய நாட்டிலே, திருவாட்களம் என்னும் சிவ ஸ்தலத்திலே வாழ்ந்த வேதியர்க ளெல்லாரும் வேதங்

களையும் வேதாங்கங்களையும் ஓதுதலொழிந்து, அக்கினி வேட்டல், சந்தியாவந்தனம், சிவபூசை என்பனவற்றை மறந்து படைக்கலம் பயின்று அரசவொழுக்கத்தை யுடையவர்களாயினார்கள். அவர்களுளொருவனாகிய விதுரன் என்பவன் காமநோய்மிக்குத் தன் பத்தினியாகிய வஞ்சுளை என்பவளை விரும்பாது பொதுமகளிரைப் புணர்ந்தான். வஞ்சுளை, அதனைக் கண்டு துயரங்கொண்டு இழிகுலத்தானொருவனை மறைவிற் புணருங்காலத்தி லொருநாள், அர்த்தராத்திரியில் மனைக்கு வந்த விதுரன் அவளையும் அவ் விழிகுலத்தானையுங் கண்டு வெகுள, இழிகுலத்தான் மனங்குலைந்தகனான். விதுரன், தன் மனைவியாகிய வஞ்சுளையைக் காலான் மிதித்துத் தண்டிக்க; வஞ்சுளை அழுது அவனை வணங்கி நின்று, "நீவிர் என்னை விரும்பாது பொதுமகளிரை விரும்பினமையின் மன்மத பாணங்களால் வருந்தி இவ்வாறு தவறு செய்தேன். பேதைமையுடைய மாதர்கள் குற்றஞ் செய்யின் அதனைப் பொறுத்தல் உம்மைப் போன்வர்களுக்குக் கடனன்றோ!" என்றாள். விதுரன் அதனைக் கேட்டு, "நீ வருந்தாதொழிக. யாவரேயாயினும் உன்னிடம் வருபவர்களைப் புணர்ந்து அவர்கள் தரும் பொருளை எனக்குத் தருவாயாக. நான் அப்பொருளைக் கொடுத்து விலைமகளிரைப் புணர்வேன்" என்றான். வஞ்சுளை அதற்கிசைந்து வெளிப்படையாகத் தன்னிடம் வருபவர்களைப் புணர்ந்து அவர்கள் தந்த பொருளை யெல்லாம் விதுரனிடம் கொடுக்க, அவன் பொதுமகளிரைப் புணர்ந்தான்.

இப்படி அனேகநாட் கழிந்த பின்பு, விதுரன் மூப்படைந்து ஊழ்வினையினாலே இறக்க, வஞ்சுளை கைமையாய்க் கலதீத்து, முதுமைப் பருவமடைந்து சிவராத்திரி நோன்பின்பொருட்டு, அத் திருவூட்களத்திலுள்ளவர்கள் திருக்கோகர்ணம் என்னும் சிவஸ்தலத்தை யடைய, அவர்களுடன் போய்க் கோடிதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, சிவாலய தரிசனஞ் செய்து, ஓரிடத்திலே தேசிகரொருவர் சிவபுராணமொன்றை ஓதிப் பொருள் விரித்துரைக்கும்பொழுது அதனைக்கேட்டு நின்றாள். தேசிகர் அச் சிவபுராணத்திலே பெண்களது கற்பிலக்கணத்தை யுரைத்த பின்பு, அக்கற்பிலே திறம்பியவர்களை யமராஜன் நிதம்பத்துள்ளே இருப்புலக்கையை அக்கினியிற் காய்ச்சிச் செலுத்தி

உருக்கிய செம்பை விட்டு வருத்துவான் என்பதைப் போதிக்க, அவள் கேட்டுத் துயரங்கொண்டு, அவரை வணங்கி, "முன்பு, காமநோயிற் படிதலாலே இளமைப்பருவத்திலே, அநேக விடர்களை விழைந்து வியபிசாரியாய் இன்பக்கடலுள் மூழ்கினேன். நரகத்துன்பததுள் வீழாது தமியேனைக் காப்பீராக" என்றாள். பௌராணிகர் அவளுக்கு இனியன கூறி, 'நீ, சிவபுராணங்களைக் கேட்டு அப் புண்ணிய பலத்தால் நரகத்துன்பமின்றிச் சிவ பதத்தை அடைவாயாக'' என்று உபதேசித்துச் சமய தீக்ஷை செய்து விபூதி ருத்திராக்ஷ மணியச் செய்து, சிவபுராணங்களை உபதேசித்தார். வஞ்சுளை சிவபுராணங்களைக் கேட்டலில் சில காலஞ் சென்ற பின்பு, சிவகணநாதர்கள் தேவவிமானங் கொண்டுவர அதிலேறிச் சிவலோகத்தையடைந்து தேவசபையிலே சிவபெருமானும் உமையம்மையும் வீற்றிருக்குந் திருக்கோலத்தைத தரிசித்து வணங்கி உமையம்மையின் பணிப்பெண்ணாயினாள். அவள் வேண்டுதல் செய்ய உமையம்மை, விந்தவனத்திலே பேயாய் அலைந்த அவளது நாயகனாகிய விதுரன், சிவபதத்தை அடையுமாறு திருவருள் செய்தார். வஞ்சுளையும் தும்புருமுனிவரும் ஒரு தேவவிமானத்திலே வந்து அவனைச் சிவலோகத்துக்குக் கொண்டுசென்றார்கள். விதுரன் சிவபெருமானையும் உமாதேவியையும் அங்கே வணங்கி, நித்தியமாகிய பேரின்பத்தை அடைந்தான.

வாழ்த்து

ஞால மோங்குக நான்மறை நீடுக
சீல மன்னவர் செங்கோல் விளங்குக
கால மாமழை மன்னுக காதலாற்
சால வீச னடியார் தழைகவே.

பிரமோத்தரகாண்டம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

திருநீற்றுப்பதிகம்

பண் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துர்வாயுமைபங்கன் திருவாலவாயான் திருநீறே. (௧)

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர்தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மைதவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே. (௨)

முத்திதருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர்புகழ்வது நீறு
பத்திதருவது நீறு பாவவினியது நீறு
சித்திதருவது நீறு திருவாலவாயான் திருநீறே. (௩)

காணவினியது நீறு கவினைத்தருவது நீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பது நீறு
மாணந்தகைவது நீறு மதியைத்தருவது நீறு
சேணந்தருவது நீறு திருவாலவாயான் திருநீறே. (௪)

பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு
பேசவினியது நீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே. (௫)

அருத்தமதாவது நீறு அவலமறுப்பது நீறு
வருத்தந்தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான் திருநீறே. (௬)

எயிலதுவட்டதுநீறு இருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
அயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே. (எ)

இராவணன்மேலதுநீறு எண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
அராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. (அ)

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கள் மெய்யதுவெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர்தீர்க்கும் இன்பந்தருவதுநீறு
ஆலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. (கூ)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
எண்டிசைப்பட்டபொருளார் ஏத்துந்தகையதுநீறு
அண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே. (க0)

ஆற்றலடல்விடையேறும் ஆலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்

இத்திருநீற்றுப்பதிகத்தினாலே நாடோறும் நியமமாக அன்போடு விபூதி அபிமந்திரித்துத் தரித்துக்கொண்டுவந்தால் சுர முதலிய நோய்களும், பேய் பூதங்களால் விளையும் பல துன்பங்களும், கவலைகளும், பாவங்களும் நீங்கும்.

திருச்சிற்றம்பலம்